# தோட்டத்தொழிலாளரின் உரிமைகள் இடம்பெற

# வழிவகுப்பேன்

## புதிய அரசியல் திட்டம்பற்றிய மாநாட்டில் அசீஸ் உறுதி


Registered as a News Paper in Ceylon   விலை சதம் 15   ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 173
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்   ஆடி 18   ஜமா. அவ் 29   திங்கட்கிழமை   [3-8-70]



அண்ணா கோப்பி




பிளாஸ்டிக் கப்பில் தயாரிக்கப் பெற்ற அண்ணா கோப்பியை வாங்கி அதிக லாபம் அடையுங்கள் வெற்றுக் "கப்களை" சேகரித்து அனுப்பி பெறுமதிவாய்ந்த பரிசுகளைப்பெறுங்கள்.


— நமது நிருபர் மு. சின்னத்துரை —

கொழும்பு, ஞாயிறு

டொனமூர் அரசியல் திட்டமும், சோல்பரி அரசியல் திட்டமும் தயாரித்தபோது தலை தூக்கிய இந்தியர்களின் பிரச்னை மீண்டும் தலைதூக்கியுள்ளது. சிறுபான்மை யோரின் குறிப்பாக இந்திய தோட்டத்தொழிலாளரின் உரிமைகள் புதியஅரசியல் திட்டத்தல்இடம்பெறச் செய்யவழிவகுப்பேன்.

இவ்வாறு நியமன எம் பியும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு அசீஸ் இன்று உறுதியளித்துள்ளார்.

புதிய அரசியல் திட்டத்தில் தோட்டத் தொழிலாளரின் நிலையென்ன என்பது பற்றி ஆராயக் கூட்டப்பட்ட மகாநாட்டில் திரு அசீஸ் பேசினார். ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைதோட்டப்பாடசாலை ஆசிரியர்சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் இலங்கை தொழிலாளர் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நியமன எம் பி திரு அசீஸ் மேலும் பேசியதாவது:- தோட்டத் தொழிலாளரின் உரிமைகளை புதிய அரசியல் திட்டத்தில் இடம் பெறச் செய்வது பற்றி ஆராய நாம் இன்று கூடியிருக்கிறோம், இன்றைய நிலையில் முக்கியமான கட்டத்தில் நாம் இருக்கின்றோம், தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் புதிய அரசியல் திட்டத்தில் இடம் பெறச் செய்யவேண்டுப் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது, தமிழரசுக்கட்சியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கட்சியில் இருக்கிறபடியால் அரசாங்க கட்சியில் அங்கம் வகிக்கும் எனக்கு இதுசம்பந்தமான பெரும் பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமைச் சட்டத்தில் 24ம் விதியில் 1ம்ஷரத்தில் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுகிறது. கடந்த அரசாங்க காலத்தில் இது சம்பந்தமாகப் பிரச்னைகளைக் கிளப்பாமல் இருந்த திரு தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று இதுபற்றிப் பேசிவருகிறது. தோட்டத் தொழிலாளரின் உரிமைகள் புதிய அரசியல் திட்டத்தில் இடம் பெறச் செய்ய நான் வழி வகுப்பேன்'' என்றார்,

இரா, சிவலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

இந்திய மக்களா அல்லது இலங்கை மக்களா என்றறியாமல் திகைத்து நிற்கும் மக்களுக்கு புதிய அரசியல் திட்டத்தில் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நாம் இந் நாட்டு மக்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ள படியால்தான், எமது சார்பில் ஓர் ஆட்சிமன்றப் பிரதிநிதியை அரசாங்கம் நியமித்துள்ளது, திரு. அஸிஸ் இந்திய மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தரப் பாடுபட வேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றி நீதிமன்றங்களில் வாதாட புதிய அரசியல் திட்டத்தில் வழிவகை செய்யவேண்டும்.

தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளின் போதனமொழி தமிழ் மொழியாக இருக்கவேண்டும், பொருளாதாரத்தில் தீர்வு காண்பதில் சோவியத் ரஷ்யா எடுத்துவரும் வழிவகைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஜனநாயக தோட்டத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த திரு, பாஸ்கரன் பேசுகையில், இந்திய தோட்டத் தொழிலாளரின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதில் அயராது உழைத்து வந்த முக்கிய பிரமுகர்கள் இன்றைய அரசாங்கத்தில் இருக்கிறார்கள், திரு, என். எம், பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, திரு, இலங்கரத்தின, திரு, மெண்டிஸ் போன்றவர்கள் எமது உரிமைகளைப் பெற்றுத் தருவதில் தவறமாட்டார்கள் என்றார், மற்றும் பலர் பேசினர்,

# கைத்தொழிலில் ஏகபோக ஆதிக்கம் ஒழிக்கப்படும்!

## மக்கள் அரசு நடவடிக்கை

**கோட்டை, ஞாயிறு**

**கைத்தொழில் துறையில் நிலவிவரும் ஏகபோக ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு மக்கள் அரசாங்கம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.**

இலங்கையரல்லாதவர்களுக்கும், பதிவுப் பிரஜைகளுக்கும் 140 கைத்தொழில் நிறுவனங்கள் உரிமையாக இருப்பதாகவும், எழுபது வீதமான கைத்தொழில் நிறுவனங்கள் வெளிநாட்டு ஆதிக்கத்திலேயே இருப்பதாகவும், இதனை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன!

கைத்தொழில் துறையில் புதிய நடவடிக்கைகள் மேற் புதிதாக பல உற்பத்திப் பிரிவுகளை அமைப்பதற்கு கைத்தொழில் அதிபர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

கைத்தொழில் துறையில் நீண்டகாலமாக ஏகபோக ஆதிக்கம் நிலவிவருவதாகவும், இதனை நீடிக்கவிடாது தடுத்துநிறுத்தி புதிய கைத்தொழில் அமைப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன.

## சட்டவிரோத குடியேற்ற தொகை அதிகரிக்கிறதாம்!

கோட்டை, ஞாயிறு

இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களது தொகை அதிகரித்து வருவதாகவும், இவர்கள் மீது பலத்த கண்காணிப்பு நடாத்துமாறும் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவை அகிலஇலங்கை பௌத்த காங்கிரஸ் கோரியுள்ளது, இதனை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென பௌத்த காங்கிரஸ் வற்புறுத்தியுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு உதவி அளிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. யில் சட்டவிரோதக்குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தொண்டர்கள் நியமிக்கப் பட்டு அவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படவேண்டும்.

■ சட்டவிரோதகுடியேற்றக்காரர்களினால் ஏற்படும் ஆபத்துக் குறித்து மக்களிடையே விளங்கப்படுத்த போதியளவு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

■ இந்தநாட்டுப் பிரஜைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும்.

—

அன்னத்தைக்

'உத்தரவாத விலைக்கு

## உயர்தர விதை நெல்லை வழங்கவேண்டும்!'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அரசாங்கம் எச் 4, ஐ. ஆர். 8 ஆகிய உயர்தரமுள்ள விதை நெல்லை உத்தரவாத விலைக்கு வழங்கவேண்டும்.''

இக் கோரிக்கையை விவசாயிகள் யாழ்ப்பாணம் [illegible] தொழில்கந்தோருக்கு அனுப் பியுள்ள விண்ணப்பங்களில் [illegible]யுள்ளமையால் விதைகளைத் தகுந்தவாறு பரிசீலனை செய்து களஞ்சியம் மூலம் வழங்கவேண்டும்.

அரசாங்கம் நேரடியாக விநியோகிக்க முடியாதஇடங்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களும் விநியோகிக்கவேண்டும்.

மாங்குளம் முக்கொலை வழக்கு

## 'வீட்டுவிறாந்தையில் படுத்திருந்த 1-ம் எதிரியை கைது செய்தேன்

### சார்ஜன்ட் தம்பிராசா சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்! கைதுசெய்தேன், அவரை மாங்குளம் முக்கொலை

ளது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு உதவி அளிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எக்கப்பட வேண்டுமெனவும் கோரப் பட்டுள்ளது.

புத்தளம் முல்லைத்தீவுக்கு இடைப்பட்ட பகுதி சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களின் இறங்கு துறையாக விடுப்பதாகவும், இவர்களுக்கு இப்பகுதி கிராமசேவகர்கள் ஆதரவாகவும், உடந்தையாகவும் இருப்பதாகவும் பௌத்தகாங்கிரஸ் தெரிவித்துள்ளது,

சட்டவிரோதக் குடியேற்றக்காரர் சம்பந்தமாக பௌத்த காங்கிரஸ், பிரதமரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:-

சட்டவிரோதக் குடியேற்றக் காரரர் சம்பந்தமாக தகவல்தருபவர்களுக்கு சன்மானம் வழங்கவேண்டும்.

கரையோரப் பகுதி

டைகள் வழங்கப்பட வேண்டும்.

## அன்னத்தைக் கொன்றார்கள்

### 6 வருடம்சிறை

மாஸ்கோ, ஆக. 2

சோவியத் ருஷ்யாவில் அன்னப்பறவை ஒன்றை இருவர் கொன்றார்கள் அதற்காக அவ்விருவருள் ஒருவருக்கு 5 வருடச் சிறையும், மற்றவருக்கு 6 வருடச் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது. இத்தகவலை சோவியத் தொழிலாளர் ஏடொன்று தெரிவித்துள்ளது.

ஆதிக்கத்திலேயே இருப்பதாகவும், இதனை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன?

கைத்தொழில் துறையில் புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஐக்கிய முன்னணிக்குழு சில புதிய சிபார்சுகள் செய்துள்ளது

## 14 வயது சிறுமி விதவையானாள்

ரோம், ஜுலை 2

பதினன்கு வயதிலேயே ஒரு சிறுமி விதவையானாள்.

இச்சிறுமியின் பெயர் ஜுலியா டொன்விஞே என்பதாகும், இத்தாலியைச் சேர்ந்த இப்பெண்ணின் கணவனுடைய வயது 21 ஆகும். நீந்தும்போது கணவன் மரணமானார்.

இத்தாலிய சட்டத்தின்படி ஒருபெண் 14 வயதில் விவாகம் செய்துகொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

... ஆ, 8 ஆகிய உயர்தரமுள்ள விதை நெல்லை உத்தரவாத விலைக்கு வழங்கவேண்டும்.''

இக் கோரிக்கையை விவசாயிகள் யாழ்ப்பாணம்கமத்தொழில்கந்தோருக்கு அனுப்பிய விண்ணப்பங்களில் விடுத்துள்ளார்கள்.

அவ்விண்ணப்பங்களில் மேலும் கோரியவை வருமாறு:

உத்தரவாத விலைக்கு வழங்கப்படும் விதைநெல் சுத்தப் படுத்தப்படுத்தி மத்தியவகுப்பாரும் குடியேற்ற வாசிகளும் அதனைப் பெறக்கூடியதாக சாகுபடி செய்யக்கூடிய இடத்திலேயே வழங்கக்கூடிய ஏற்பாடு செய்யவேண்டும்.

விதைநெல்லு மாத்திரமல்லாது உபஉணவு விதைத்தானியம். காய்கறிவகை, கடலை, சிறுதானியம்போன்றவற்றுக்கான விதைகளையும் தரவேண்டும்.

கடந்த காலபோலி விதைகளை பெற்று விவசாயிகள் பெருநட்டத்துக்குள்ளாகி

... செய்து களஞ்சியம் மூலம் வழங்கவேண்டும்.

அரசாங்கம் நேரடியாக விநியோகிக்க முடியாதஇடங்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களும் விநியோகிக்கவேண்டும்.

இதனுல் 1970—71ம்ஆண்டுகளில் நல்லவிளைச்சல் ஏற்படும். (கு. வி. ம,)

## 10 ஆயிரம்தொன் மாவு நாசம்

கோட்டை, ஞாயிறு

10 ஆயிரம் தொன்மாவு உணவுக்கமிஷனின் கிட்டங்கிகளில் நாசமடைந்துள்ளது

அண்மையில் வர்த்தக மந்திரி திரு. ரி. பி இலங்கரத்தினவின் உத்தரவின் போது அதிகாரிகள் சோதனையிட்டபோது இத்தகவல் தெரியவந்தது.

# 1-ம் எதிரியை கைது செய்தேன்

## சார்ஜன்ட் தம்பிராசா சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

இரண்டாம் எதிரியை முன்புபார்த்திருக்கின்றேன். அவரை ஜுலை 10-ம் தேதி கைதுசெய்தேன். அவரை வீட்டில் கைது செய்யவில்லை, மற்றொருவர் வீட்டில் கைது செய்தேன்.

மாங்குளம் முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த கான்ஸ்டபிள் லியனகே யோசேப் பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் மாங்குளத்தில் 68-ம்ஆண்டு ஜுலை2-ம் தேதி வில்லியம் பியரத்தின ஆகியோர் செல்லத்துரை சின்னையா, பால்ராஜ் ஆகியோரை கொலை செய்ததாககுற்றம்சாட்டப்பட்டது

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே. ஹெரத், வழக்கறிஞர் சேர்ளிசெனிவரத்னவின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் சிவா நாகராசா நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் அபயசேகரா ஆஜரானார்.

பெரேரா சாட்சியமளிக்கையில்மேலும்கூறியதாவது

சார்ஜன் தம்பிராசாவும் பொலிசாரும் ஜீப்பில் குருவிட்ட பொலிஸ் நிலையத்திற்கு வந்தார்கள். நான் 2-ம் எதிரியை கைது செய்தேன். தான் அவரைஅடிக்கவில்லை. என்னுடன் வந்தவர்களும் அடிக்கவில்லை.

சார்ஜன் பொ. தம்பிராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

68-ம்ஆண்டு ஜுலைமாதம் வவனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினேன் கிராம சேவகரிடமிருந்து ஒரு தகவல் கிடைத்தது. அத் தகவலின்படி இன்ஸ்பெக்டர் இராமநாதனுடன் மாங்குளத்திற்குச் சென்றேன். இன்ஸ்பெக்டரிடம் சுப்பையா வாக்குமூலமளித்தார். நான் தடயப்பொருட்களை பாரமெடுத்தேன். இன்ஸ்பெக்டரின் உத்தரவின்பேரில் நான் ஜீப்பில் குருவிட்டபொலிஸ் நிலையத்திற்கு சென்றேன்: 4 கன்ஸ்டபிள் களும் பழனியப்பனும் என்னுடன் வந்தார்கள். நான் முதலாம் எதிரியை கைதுசெய்தேன். அவர் வீட்டின் விருந்தையில் படுத்திருந்தார், அவர்களை வவனியா பதில் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## தோட்டத்தொழிலாளர் பற்றி ஆராயக்கமிட்டி நியமனம்

கொழும்பு, சனி

தோட்டத் தொழிலாளரின் சேமலாபநிதி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உடனடி நசவடிக்கை எடுப்பதால், தாயகம் செல்வோரின் தொகையை அதிகரிக்கச் செய்ய முடியும் என்று பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினுர்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி, தொழில் அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி மத்ல்யவங்கி கவனர், குடியேற்ற, குடிஅகல்வு அதிகாகள் கொண்ட மாநாடு ஒன்றைப் பிரதமர் ஸ்ரீமாவோ இன்று கூட்டினுர். இதில இந்திய தொழிலாளரின் சேமலாபநிதி, சம்பளம் போன்ற கொடுப்பனவுகள் பற்றி தோட்டமுதலாளிமார்கையளித்த அறிக்கைகள் தகவல் பற்றி ஆராயப்பட்டன.

தோட்ட முதலாளிமார் கொடுத்த தகவல்களில் பிழையிருப்பதால் அதை உடனடியாக அமுல் நடத்த முடியாதிருப்பதாகவும், தகவல் சரியாக கொடுக்கப் பட்டால் காலதாமதமின்றி இந்திய வம்சாவழியினர் தாயகம் திரும்பும் தொகையை அதிகரிககச் செல்யலாம் என்றும் பிரதமர் கூறினுர் இதுசம்பந்தமான . அறிக்கைகளை ஆராயக் கமிட்டி ஒன்றுநியமிக்கப்பட்டது

# ஏழைகளுக்கு வாழ்வளிக்கவே கூட்டரசில் சேர்ந்தோம்

யாழ்ப்பாணம், திங்கள்

'நாம் கூட்டரசில் சேர்ந்ததன் நோக்கம், எமது கொள்கைகளை விட்டுக் கொடுத்து சுதந்திரக் கட்சியின்கொள்கைகளை ஏற்பதற்கல்ல ஒரு பொது வேலைத் திட்டத்தில் நாட்டுக்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்திடலாம் என்ற நோக்கத்துடனேயே சேர்ந்தோம்''

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த கம்யூனிஸ்ட் கட்சியின் வடமாகாண கிளையின் மகாநாட்டில் திரு. வி. பொன்னம்பலம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினுர்.

அரசியல் நிர்ணய சபை உட்பட பலவிஷயங்கள்பற்றி நீண்டநேரம் ஆராயப்பட்டது.

திரு. வி, பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: நாம் கூட்டணி அமைத்த முயற்சியிலே ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக இருந்த சக்திகள் பல அழிக்கப்படுகின்றன கம்யூனிஸத்தை எதிர்ப்பவர்களும் பலர் இம்முயற்சியை ஆதரிக்கிறார்கள் இந்த அரசாங்கத்தினுல் ஏற்கப்பட்ட பொதுவேலைத்திட்டம், கம்யூனிஸத்திற்கு வழிகாட்டும் நீண்டகாலத் திட்டமாக நாம் கருதுகிறேம் ஆதலால் எந்தக் கட்சியிலிருந்தால் லாபம் கூடக்கிடைக்கும் என்பதைப் பிரச்னையாக்காமல், எக்கட்சியிலிருந்தால், நாட்டுக்கு நல்லபணி செய்திடலாம்என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். எம்மிடையே பிளவைத்தூண்டும் வகையில் சிலர் பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள் இவற்றையெல்லாம் பார்த்து உணர்ச்சிவசப்படாமலும், தளர்ச்சி அடையாமலும், ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும்.

திரு. ஏ. வைத்திலிங்கம் பேசும்போது கூறியதாவது: அடிமைப்பட்டுக்கிடந்த சமுதாயத்திலே ஏற்படும் புரட்சியை இருபிரிவுகளாகப்பிரிக்கலாம் ஒன்று தேசியப் புரட்சி மற்றொன்று சோஷலிச மாற்றம் தேசியப்புரட்சி மக்களின் கலாச்சாரவேட்கையாலும் அரசியல் விடுதலை வேட்கையாலும், பொருளாதார பிரச்னைகளாலும் ஏற்படுகிறது இந்தப் பொருளாதாரப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்குப் பணம் தேவைப்படுகிறது

(4-ம் பக்கம் பார்க்க)

## திரைப்படதயாரிப்பாளருக்கு கருணாநிதி கூறும் யோசனை

சென்னை, ஆக 2

தமிழ் நாட்டு திரைப்படத் தயாரிப்பாளர்கள் மேற்கிந்திய திரைப்படத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்தும் நவீன சாதனங்களைப் பயன்படுத்தலாமென்று தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி யோசனை தெரிவித்தார்.

வெளிநாடு சென்று திரும்பிய திரு. கருணாநிதிக்கு தமிழ்நாடு திரைப்பட வர்த்தகசபை வரவேற்பளித்தது இவ்வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே திரு. கருணாநிதி மேற்கண்ட யோசனையைத் தெரிவித்தார்.

மேற்கு நாடுகளிடமிருந்து கலைத்துறையில் தமிழ்நாடு அறிந்து கொள்ளக்கூடியது சிறிதளவுதானென்றாலும் படத்தயாரிப்பில் அவர்கள் பயன்படுத்தும் நவீனசாதனங்களைத் தமிழ் நாட்டுப் படத்தயாரிப்பாளர்கள் பயன்படுத்துவது நல்லதென்று திரு. கருணாநிதி கூறினுர்.

## இதுவரை எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம்திங்கள்

ஆடி-அமாவாசைத் தினத்தன்று நடைபெற்ற குண்டு வீச்சுச் சம்பவங்கள் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

கங்கேசன்துறை எம் பி திரு எஸ் ஜே வி செல்வநாயகம், செனட்டர் நடராசா ஆகியோரின் வீடுகளுக்கு குண்டுகள் வீசப்பட்டது சம்பந்தமாகவும் விசாரணை தொடர்ந்து தீவிரமாக நடைபெறுகிறது. திரு செல்வநாயகத்தின் வீட்டின் சுவர் ஒரு பகுதி மட்டும் சேதத்துக்குள்ளாகியது. திரு நடராசா வீட்டின் கூரையில் ஒரு ஓடுமட்டும் சேதமடைந்தது.

தேருக்கு தீவைப்பு சம்பந்தமாக தேடப்பட்டுவந்ததாகக் கூறப்படும் தீண்டாமை வெகுஜனஇயக்கத் தலைவர் எஸ் ரி என் நாகரத்தினமும் இது வரைகைதுசெய்யப்படவில்லை. விசாரணை தொடர்கிறதுமாவிட்டபுரப் பகுதியில் அமைதி நிலவுகிறது.

# அரபுநாடுகள் அதிகளவுதேயிலை இறக்குமதி செய்ய முடிவு

## இலங்கை இஸ்ரேல் உறவு துண்டிப்பின் எதிரொலி?

கோட்டை, ஞாயிறு

அரபுநாடுகள் இலங்கையிடமிருந்து பெருந்தொகையான தேயிலையை இறக்குமதி செய்யவுள்ளது. வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை இன்று நடைபெற்ற போது அரபு நாடுகள் இத்தகவலை வெளியிட்டன.

இஸ்ரேலுடனுன ராஜ்ய உறவுகளை இலங்கை அரசாங்கம் துண்டித்ததினுல் இஸ்ரேலுடன் தொடர்புள்ள பல பிரிட்டிஷ் கம்பனிகள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு இடையூறு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்தே அரபு நாடுகள் இலங்கைக்கு கைகொடுத்து உதவ முன்வந்துளளதாக கருதப்படுகிறது.

வழமையாக இலங்கையிலிருந்து பெறப்படும் தேயிலையைவிட அதிகமளவு தேயிலையை இறக்குமதி செய்ய அரபுநாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன,

சென்னை ஆக் 2

தமிழ்நாடு கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அடுத்தமாதம் 3வது வாரத்தில் அமெரிக்கா செல்கிறார். அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் செல்லும் திரு. செடுஞ்செழியன் அங்குவைத்தியக் கல்விபற்றி நன்கு ஆராந்துவருவார்.

## இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் 8ந்திரு விழாவாகிய இன்று மாலை 6 மணிதொடக்கம் 7-30மணி வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் கதாப்பிரசங்கமும் சுவாமி குதிரைவாகனத்தில் வீதிவலம் வருதலும் இரவு 8 15—9-45வரை சங்கீத பூஷணம் திரு. வி. பரமசாமியின் இன்னிசைக் கச்சேரியும் நிகழும்.

## ரூபா 1 லட்சம் பரிசு

புதுடில்லி, ஆக 2

பிரபல உருதுக் கவிஞர் ரெஜிபதி சிருக் பாரதிய ஞான பீடத்தின் உயர் பரிசைப் பெற்றுள்ளார்.

1959-ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'ஜீ ஏ மக்மா' என்ற அவரது கவிதை நூலுக்கே இப்பரிசு அளிக்கப்படுகிறது. இந்நூல் இதற்கு முன்பும் பல உயர்தரப் பரிசுகளைப் பெற்றுள்ளது.

இவருக்கு 1 லட்சம் ரூபாவும், கேடயம் ஒன்றும் இ பரிசாக அளிக்கப்படும்.

## பிரியாவிடை கூறவேண்டி நேர்ந்தாலும் நேரலாம்!"

— தஹா

கோட்டை, ஞாயிறு

'ஐக்கியதேசியக் கட்சிக்கு நான் பிரியாவிடை கூற வேண்டி நேர்ந்தாலும் நேரலாம்' காலி ஆட்சிமன்ற அங்கத்தவரும் ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்தவருமான டாக்டர் டபிள்யு தஹநாயக்கா ஜுலை 19-ம் திகதி நடைபெற்ற அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் தனது கட்சியின் கொள்கைகளுக்கு முரண்பாடாகப் பேசியது பற்றி கேட்கப்பட்டகேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது பேச்சுப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது;-

''நான் நிர்ணயசபையில் தெரிவித்த கருத்துக்கள் உறுதியானவை, தெளிவானவை ஐக்கிய தேசியக் கட்சி நான் தெரிவித்த கருத்துக்கள் கட்சிக் கோட்பாடுகளுக்கு முரணுனவை எனச் கூறி. தாஙகள் கருத்தை மாற்ற விரும்பாவிட்டால் நான் அக்கட்சிக்கு எனது பிரியாவிடையைத் தெரிவிக்க வேண்டி ஏற்படும் இதைத் தவிர வேறுவழியொன்றுமில்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 3—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை. 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்சேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள். இரவு 6-00 பாமாலை, 7-00 திரைகானம், 7-15 வயலின். 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30செய்தித் தொகுப்பு.


### விற்பனைக்கு

ஓவியர்களுக்கும், பெயின்ரிங் வேலைசெய்பவர்களுக்கும், சேலை பிறின்ரிங் வேலை செய்பவர்களுக்கும் உகந்த ஸ்பிறே பெயின்ரிங் கருவி!

எயர் கொம்பிரஸ்சர் இல்லாமல் மின்சாரத்தில் இயங்குவது, சுலபமாக எங்கும் கொண்டு சென்று வேலைசெய்யக்கூடியது!

Burgess Electric Spray Painting Equipment (British make)

கைவசம் இருப்பில் சொற்பமுண்டு. உங்கள் தேவைக்கு முந்திக்கொள்ளுங்கள்.

Burgess Engraving Machine என்கிறேவிங் மெசின் விற்பனைக்கு உண்டு.விபரங்கட்கு:-

K. S. பாலசிங்கம், 90, கொழும்புத்துறை றேட், கொழும்புத்துறை தபால் கந்தோருக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2384

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த

இரு கோடுகள்

வெஸ்லி சினிமா மானிப்பாய்

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி

சத்தியன், ஷீலா, மது நடித்த

செம்மீன்

(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

என், எஸ், கிருஷ்ணன் ரி. ஏ, மதுரம் - டெய்ஸி ராணி நடித்த

67-ல் என்.எஸ்.கிருஷ்ணன்

(எஸ், ரீ ஆர். பிலிம்ஸ்)

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ குமாரி ராஜம் புவனேந்திரம்

★ லடீஸ் வீரமணி


# யாழ். கோஷ்டி - கடற்படை 9-ல் மோதுகின்றன!

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் இலங்கையிலுள்ள மாவட்டங்களிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாதம் 9-ம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியும் கலந்துகொள்கின்றது. 16க்கும் மேற்பட்ட கோஷ்டிகள் கலந்து கொள்ளும் இந்தச் சுற்றுப் போட்டி இம்மாதம் 9-ம் திகதி தொடக்கம் இலங்கையின் ஏனைய மாகாணங்களிலும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது.

இம்மாதம் 9-ம் திகதி ஆரம்பமாகும் முதல்கட்டப் போட்டியில் யாழ் தெரிவுக் கோஷ்டியுடன் - இலங்கை கடற்படைத் தெரிவுக் கோஷ்டி யாழ்ப்பாணத்தில் மோதுகின்றது. யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறவிருக்கின்றது.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெறும் 2-வது கட்டப் போட்டி இம்மாதம் 16-ம் திகதி கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் யாழ். தெரிவுக்கோஷ்டிக்கு வீரர்களைத் தெரிவுசெய்வதற்காக யாழ் உதைபந்தாட்டச்சங்கம் தற்போது உதைபந்தாட்ட வீரர்களுக்கு கடும்பயிற்சி அளித்துவருகின்றது. யாழ். உதைபந்தாட்டக் கோஷ்டியின் பயிற்சியாளர்களான. திரு. சற் சிங்கராயரும், திரு. எம். டி. தம்பிராசாவும் மேற்படி வீரர்களுக்கு யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் தினமும் கடும்பயிற்சி அளித்துவருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களில் இருந்து 30க்கும் அதிகமான வீரர்கள் தினமும் இப் பயிற்சியில் கலந்து வருகின்றார்கள். இம்மாதம் 9-ம் திகதி யாழ் தெரிவுக் கோஷ்டிக்கும் - இலங்கை கடற்படைக் கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காக பலம்கொண்ட யாழ். தெரிவுக்கோஷ்டி ஒன்றை இம்முறை தெரிவுசெய்யப் போவதாக யாழ் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. சற். சிங்கராயர் கூறினார். (தே. நி)

# கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு முதுகில் குறி சுடவேண்டுமாம்

## முன்னாள் பிரதம நீதியரசர் யோசனை

கோட்டை, ஞாயிறு இந்தநாட்டுக்குத் தினமும் வந்துகொண்டிருக்கும் கள்ளக்குடியேற்றக் காரர்களின் முதுகுகளில் அடையாள குறிகள் சுடவேண்டுமென்றும் அப்படிச்செய்வதனால் அவர்களை இலகுவில் கண்டுபிடிப்பதும் திருப்பியனுப்புவதும் சாத்தியமாகவிருக்கும் என்றும்முன்னாள் பிரதமநீதியரசர் ஹேமா பஸநாயக்கா கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற மைத்திரிநிகாய சங்க சபா கூட்டத்தில் பேசுகையில் திரு. பஸநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார்.

பண்டித ஹேனபினுவல புஞ்நசார தேரோவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. பஸநாயக்கா பேசினார். இந்தக் கூட்டத்துக்கு நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பிக்குமார்கள் வருகை தந்திருந்தார்கள்.

கள்ளத்தனமாகக் குடியேறுகிறவர்களின் பிரச்சனை இந்த நாட்டுக்குப் பெரும் விழுக்காட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் குறிகள் சுடாதவரைக்கும் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைப்பது சாத்தியமில்லையென்று திரு. பஸநாயக்கா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னை அரசாங்கம் பதவியிலிருந்த பொழுது கள்ளக் குடியேற்றக் காரர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் அடையாள அட்டைகள் வழங்க வேண்டும் என்று கூறியதாகவும் ஆனால் அதனால் பலனில்லாது போனது மட்டுமின்றி வடக்கிலும், கிழக்கிலும் வாழும் சிங்களவர்களையாவது கணக்கெடுத்துப் பதியும்படி கேட்டதும்கூட பயனில்லாமல் போய்விட்டது என்றும் அவர் சொன்னார்.

நாட்டின் செல்வத்தை

# சகலரும் பகிர்ந்து கொள்ளும் அமைப்பு வேண்டும்

## தேரோவின் கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரத்தினபுரி, ஞாயிறு [illegible]

# செய்திச் சுருக்கம்

### படகு கவிழ்ந்தது; பலியானார் ஒருவர்

ஓட்டமாவடி, ஞாயிறு ஆற்றில் சென்றுகொண்டிருந்த படகு கவிழ்ந்தமையால் நீரில் மூழ்கி ஒருவர் மரணமானார்.

இவ்வாறு மரணத்துக்குள்ளாகியவர் மகிந்தசிறி சூரியாராச்சி என்பவர்

சூரியாராச்சியுடன் வேறிருவரும் பனிச்சங்கேணி ஆற்றில் ஒரு படகில் சென்றுகொண்டிருந்தனர். பலமான காற்று வீசியதால் படகு தலைகுப்புறக் கவிழ்ந்தது. நீரில் மூழ்கிய மூவருள் இருவர் நீந்திக் கரை சேர்ந்தனர் சூரியாராச்சி கரைசேராமையினால் மறுநாள் தேடுதலின் பின் அவரது சடலம் மீட்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

0 0 0

### ஆஸ்பத்திரிசோற்றில் கல், மண்,உமி கலப்பு

கல்முனை, ஞாயிறு கல்முனை ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்குத் தரங்கெட்ட சோறு வழங்கப்படுகின்றதென நோயாளிகள் தெரிவிக்கின்றனர்

நோயாளிகளுக்கு வழங்கும் சோற்றில் கல், மண், நெல், உமிஆகியன கலந்திருப்பதாகவும் இதற்கு சமையற்காரர்களின் கவலையீனமே காரணமென்றும் முன்பு வழங்கப்பட்ட பாணில் இத்தகைய மோசம் எதுவும் இல்லையென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

0 0 0

### புதிய காரியதரிசி

திரு. பி. நாணயக்காரா அரசாங்க சேவைக்கமிஷனின் காரியதரிசியாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. ஆர். எல். பாலசூரியர் முன்னர் இப்பதவியை வகித்தார் அவர் தற்போது கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

0 0 0

### திருவிளையாடல் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள் [illegible]

சினிமா விமர்சனம்

# வெண் சங்கு

'வெண்சங்கு'

சங்கு வெண்மை தானே சுட்டாலும் வெண்மை தருவது சங்கு.

மீனு மூவிசாருக்காக டபிள்யு. எம். எஸ். தம்பு சரியாகச் சுட்டிருக்கிறார் அது வெண் சங்குதான்.

இலங்கையில் நல்லதொரு தமிழ்ப்படம் தயாரிக்க முடியுமா, தமிழ் நாட்டுப்படங்களுடன் போட்டிபோட முடியுமா?

இந்தக்கேள்விக்கு 'வெண் சங்கு' சரியான பதிலளித்திருக்கிறது.

இலங்கையில் மட்டுமல்ல, தமிழ் நாட்டுத்திரைகளில் கூட தமிழ் நாட்டுப் படங்கள் பலவற்றுடன் 'வென் சங்கு' போட்டிபோட முடியும்; வெற்றியும் பெறமுடியும்

தமிழ் நாட்டுப்படங்களில் வரும் கதாநாயகி தான் பலவித நடனங்களை. பலவித கோணங்களில் ஆடமுடியுமா? நம் நாட்டுக்கதாநாயகியும் சளைக்கவில்லை. 'வெண்சங்கு' கதாநாயகி ஆடும் நடனங்கள் எந்த வகையில் குறைவு! ஆட்டம் மட்டுமா நடிப்பு தமிழ்நாட்டுப்படங்களில் வரும் முதல் தர கதாநாயகிகளுக்கு நடிப்பில் எந்தவகையிலும் குறைந்தவளல்ல வென்பதைதமது முதல்படத்திலேயே நிரூபித்திருக்கிறார் குமாரிராஜம்.

கதாநாயகி குமாரி ராஜத்துக்கு ஈடுகொடுத்து நடிக்க முடியவில்லை யென்றாலும் கதாநாயகன் அராலி புவனேந்திரன் முயற்சி எடுக்கவில்லையென்று சொல்லமுடியாது. என்றாலும் இனிவரும் படங்களில் அவர் நகைச்சுவைப்பாத்திரம் ஏற்றால் இதைவிட நன்கு சோபிப்பாரென்பது எனது கருத்து.

'நடிகவேள்' என்று நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்ற லடீஸ்வீரமணி 'வெண்சங்கு' படத்தில் வில்லன். பொருத்தமான பாத்திரம். தமிழ் நாட்டுப்பட வில்லன்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய தேயில்லை. தனித்துவம் அவரின் முத்திரை. பார்வை, அசைவு மூலமே தான் 'நடிகவேள்' தான் என்பதை உறுதிப்படுத்துகிறார் இதுவரை இங்கு தயாரிக்கப்பட்ட படங்களில்ஏன்தான் இவரை மறந்திருந்தார்களோ!

ரொஸாரியோ பீரிஸ் ஒரு சில கட்டங்களில் தான் காட்சியளிக்கிறார். அவர் நினைவில் நின்றுவிடுகிறார்.



வும் திறமையாக இருக்கின்றன. யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர், கூட்டுறவுச் சம்மேளன மாடிக்கட்டிடம், யாழ். பொது நூல் நிலையம், மாநகரசபைக் கட்டிடம், சுப்பிரமணியம் பூங்கா, நல்லூர்கந்தசாமி கோவில், கீரிமலை இப்படி யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் தம்பலகமம், ருகமம், சீதாவாக்கை கதிர்காமம், பேராதனை மற்றும் இலங்கையின் இயற்கைக் காட்சிகளும் கதைக்கேற்ப பொருத்தமாகவும் அழகாகவும் படம்பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப் பார்க்கும்போது உள்ளம் பூரிக்கிறது.

குழந்தை நட்சத்திரங்கள் ''அசகாய சூரர்கள்தான்'' என்று பெயர்பெறும் வகையில் நடித்திருக்கின்றனர். கதாநாயகியின் தந்தை நமசிவாய முதலியாராகவரும் ஏ. எஸ். ராஜா வைத்தியர் பரமானந்தர், வில்லனின் 'அடிஆள்' சுந்தரி ஆகியோரும் குறை சொல்லஇடம்வைக்கவில்லை. 'அடங்காப்பிடாரி' நடராசா சிரிக்கவைக்கிறார். ரசிக்கக்கூடியதுதான். சில வார்த்தைகளைத் தவிர்த்திருக்கலாம்!

வசனம் பொதுவாக நன்றாகவே இருப்பினும் இன்னு சிறிது கவனம் செலுத்தியிருந்தால் பரிமளித்திருக்கும். மேக் அப்பிலும் படத்தின் முன்பாதியில் 'கமரா' கோணங்களிலும் பின்பாதியில் செலுத்தப்பட்ட நுணுக்கத்தைக் கவனித்திருந்தால் பிரமாதமாயிருக்கும். கதா

தினசரி 4 காட்சிகள்

★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

நடித்த

இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக்கொண்டு உருவாக்கப்பட்ட சித்திரம்.

மீரு மூவிஸ்

# வெண்சங்கு

தயாரிப்பு: டைரக்‌ஷன்: W. M. S. தம்பு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

இங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா] காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன் | சங்கீதம் K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

# அமைப்பு வேண்டும்
## தேரோவின் கருத்து

"இரத்தினபுரி, ஞாயிறு சோஷலிஸத்தின் எதிரிகளைத் தெரிந்துகொண்டு அரசாங்கம் செயல்பட வேண்டிய அதேசமயம், எதிர்ப்பாளர்களாய் விளங்குகிறவர்களை தூர ஒதுக்கிவிடாமல் அருகில் அழைத்து விஷயங்களை அவர்களுக்கு விளங்க வைக்கவேண்டும். ஒருவரைத்தள்ளி ஒதுக்கிவிட்டு இன்னொருவர் முன்னேறும் சமூக அமைப்பு நமக்குத் தேவையில்லை. நாட்டின் செல்வம் யாவருக்கும் பொதுவாக பகிர்ந்துபோகக்கூடியதான ஒருமுறையை இந்த நாட்டில் நாம் ஏற்படுத்தவேண்டும்."

இவ்வாறு பண்டித ஹேன்பிட்டி கெதர ஞானசீர தேரோ இரத்தினபுரி பெரியாஸ்பத்திரியில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

மனிதன்பூரணமாக சாந்தமுள்ளவனாக மாறும்வரையில் சௌக்கியமான சமூகம் ஒன்று ஏற்படுவது சாத்தியமில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

## நாட்டைக் காக்கும் நிதி

புத்தூர், ஞாயிறு ஈவினை விக்கினேஸ்வர வித்தியாசாலை ஆசிரியர்கள் தமது ஒரு நாள் வேதனத்தை நாட்டைக்காக்கும் நிதிக்கு வழங்கினர்.

## இடைத் தேர்தல்

சுழிபுரம், ஞாயிறு பண்டத்தரிப்பு பட்டின சபையின் மூன்ரும் வட்டாரத்துக்கான நியமனப் பத்திரத் தாக்கல் வரும் 16ந் திகதி நடைபெறவுள்ளது. கோர்ட் மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பை தொடர்ந்தே இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.


ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி.
போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர்- விஜயநிர்மலா
நடித்த
சிரித்த முகம்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45-P.M.
Poya, Pre-poya 4 Shows
Rod Taylor, Claudia Cardinale
in
THE HELL WITH HEROES
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya-Prepoya 10-30 a.m.
Graig Stevens
in
GUNN... Number One
(Strictly for adults)


இன, மத, அரசியல்

# வேறுபாட்டை ஒழிப்பது ஒருவரின் தலையாய கடன்

—மகா தேசாதிபதி



மொறட்டுவ சமூகசேவா சங்கத்தினதும் வயோதிப விடுதியினதும் பொன்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய கவர்னர் ஜெனரல் திரு வில்லியம் கோபல்லவாமேற் கண்டவாறு கூறினர்.

மகாதேசாதிபதி மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இத்தகைய ஒரு நிறுவனம் 50 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்வதென்பது இலகுவான காரியமல்ல. இது சிறந்த சேவையொன்றை ஆற்றிவரும் மொறட்டுவ மக்கள் பெருமைப்படக்கூடியதொரு விடயமாகும்.

மொறட்டுவ ஆட்சி மன்ற அங்கத்தவர் திரு விமலசிறி மெல், சமூகசேவா சங்கத் தலைவர் திரு. ஊ. ஜே. சில்வா உட்பட பலர் இவ் வைபவத்தில் உரையாற்றினர்.

## ஆண்டவன் பணி ஆசிரியப்பணியே

அட்டாளைச்சேனை, வெள்ளி

"ஆசிரியர்கள் பணி என்பது ஆண்டவன் பணியாகும். இதை ஆண்டவன் பணியென்று கருதியே செயல்படவேண்டும். இந்த உணர்ச்சி எம்மிடை இல்லையானல் நமது சமூகம் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கும் நற்பலனைப்பெற முடியாது."

இவ்வாறு அட்டாளைச்சேனை அல்முனீரு வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமையாசிரியர் ஜனப் எம். கே. மீராசாகிப் பேசும்போது குறிப்பிட்டார்.

## "தோட்டத்தை பகிர்ந்து தருக"

உடுநுவர, ஞாயிறு "உடுநுவரப் பகுதியிலுள்ள லியஸ் கஹவத்தைத் தோட்டத்தை அரசாங்கம் பொறுப்பேற்று காணியற்ற மக்களுக்கு பங்கீடு செய்து வழங்கவேண்டும்."

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை, உடுநுவர இஸ்லாமிய முன்னணியினர் கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத்திடமும் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. டி. பி. ஜயசுந்தரவிடமும் சமர்ப்பித்துள்ளனர்.

## பல்வலி பொறுக்காத யுவதி தற்கொலை

சிலாபம், ஞாயிறு பல்லில் ஏற்பட்ட வலியைப் பொறுக்காத யுவதி ஒருத்தி நச்சுத் திராவகம் அருந்தி மரணமானர்.

இச்சம்பவம் சிலாபம் பொலிஸ் பிரிவிலுள்ள குடியேற்றத் திட்டமொன்றில் நடைபெற்றுள்ளது.

பதினறு வயதுடைய இந்தப் பெண் நீண்ட நாட்களாக பல்வேதனையால் அவஸ்தைப்பட்டு வந்திருக்கிருளென்பது மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

0 0 0

## திருவிளையாடல் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள் இம்மாதம் 7-ந் திகதி ஆரம்பமாகும் வேலணை பெருங்குள முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவில் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறும். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திரு. வே. செல்லையா, திரு. அ. செல்வத்துரை, திரு. பொன். தெய்வேந்திரா, திரு. க. சிவராமலிங்கம், திரு. சோ. தியாகராஜா ஆகியவர்களே சொற்பொழிவு நிகழ்த்துவோர்.

0 0 0

## சிரமதானம் மூலம் ஒழுங்கை திருத்தம்

மானிப்பாய், ஞாயிறு மானிப்பாய் பட்டின சபை எல்லைக்குள் சிரமதானத்தின் மூலம்முன்னூறு அடி ஒழுங்கை ஒன்று கற்கள் பரவித் தார் பூசி செப்பப் படுத்தப்பட்டுள்ளது

இவ் ஒழுங்கை காலஞ்சென்ற நாகலிங்கம் சின்னத்தம்பி என்பவரின் ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டது.

0 0 0

## டைனமேட்டால் கைவிரல்கள் சிதறின

வாழைச்சேனை, ஞாயிறு டைனமேட் ஒன்றை கையில் பிடித்திருந்தவர் கைவிரல்களை இழந்தார்.

வாழைச்சேனைச் சேர்ந்த இஸ்மாலெவ்வை என்பவிரே இவ்வாறு விரல்களை இழந்தவராவார்.

வாழைச்சேனை ஆற்றில் டைனமேட்டை வீசி மீன் பிடிக்க முயறன்றபோதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்நபருக்கு முகத்திலும் நெஞ்சிலும் காயங்கள் உள்ளனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

## கிராமசபை முயற்சி

பண்டத்தரிப்பு, ஞாயிறு பண்டத்தரிப்புக் கிராம சபையில் உள்ள பெரியவிளான் கிராமத்தில் சந்தை ஒன்றினையும் பொதுநூல் நிலையம், வண்டிச்சவாரி மைதானம் என்பனவற்றையும் நிறுவுவதற்குப் பண்டத்தரிப்புக் கிராமசபைத் தலைவர் திரு. கனகசபாபதி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இங்கு தயாரிக்கப்பட்ட படங்களில்ஏன்தான் இவரை மறந்திருந்தார்களோ!

ஜெஸாரியோ பீரிஸ் ஒரு சில கட்டங்களில் தான் காட்சியளிக்கிருர். அவர் நினைவில் நின்றுவிடுகிருர். அவர் இனியும் நினைவில்தான் நிற்கமுடியும் ஆமாம் அவரைத்தான் காலன்பறித்துக் கொண்டுவிட்டானே!

கதையைப் பற்றிஒன்றுமே சொல்லாமலிருக்கிறேனே சில தமிழ் நாட்டுப்படங்கள் மாதிரி இதிலும் கதையென ஒன்று இல்லையோ என்று நினைக்கிறீர்களா? கதையிருக்கிறது. மர்மமும் இருக்கிறது பணம், மது, மங்கை இந்த மூன்று ஆசைகளையும் கொண்ட ஒருவன் தன்மகளையே வாழாவெட்டியாக்கி, அவள்பெற்ற பிள்ளையைக் கூட அவளிடமிருந்துபிரித்து; தனதுமகனின் காதலியையே பெண்டாளத்துணிந்து, தன்மகன்மீதே கொலைக் குற்றம் சுமத்தப்படுவதற்கும் காரணமாக இருக்கிருன் அவனது ஆசைக் குடும்பங்களையே சீரழிக்கிறது. கடைசியில் தவறை உணர்கிருன். வாழ்வையே முடித்துக்கொள்கிருன்.

ஒலி, ஒளிகாட்சிஅமைப்பு, பாடல்கள், பின்னணியா... ...கும், மேக் அப்பிலும் படத்தின் முன்பாதியில் 'கமரா' கோணங்களிலும் பின்பாதியில் செலுத்தப்பட்ட நுணுக்கத்தைக் கவனித்திருந்தால் பிரமாதமாயிருக்கும். கதாநாயகியின் தோழிகள் ஆடும் சில ஆட்டங்களையும் கைவிட்டிருந்தால் நஷ்டமில்லை.

'வெண்சங்கு' ஈழத்தின் தமிழ்த்திரைப்படத்துக்கு ஒரு கலங்கரை விளக்கு. அனைவரும் பார்க்கவேண்டிய சிறந்த படம் 'வெண்சங்கு.'

—எம். ஜி:

## மாதகலில் துணை ஆயர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு மாதகல் புனித தொம்மை அப்பர் ஆலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் யாழ். துணை ஆயர் கலந்துகொண்டு ஐம்பதுக்கும் அதிகமான சிறுவர்களுக்கு உறுதி பூசுதல் சடங்கு நிறைவேற்றி வைத்தார்.


விற்பனையாகிறது!

சங்கிலியம்

(ஈழநாடு வெளியீடு)
'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி
'ஈழநாடு'ஸ்தாபனத்தாரால் நடாத்தப்பட்ட காவியப்போட்டியில்
ரூபா 500 பரிசு பெற்ற
காவியம் சங்கிலியம்
தமிழ்மன்னன் சங்கிலியனின் வீர வரலாற்றைக் கூறும் இக் காவியத்தை அழகான நயமிக்க பாக்களால் தொகுத்து அளித்துள்ளார்
கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை
சங்கிலியனை நேசிக்கும் ஒவ்வொருவரும்,
தமிழ்மொழியையும் இலக்கியத்தையும்
நேசிக்கும் ஒவ்வொருவரும்,
கவிதையையும் கவிஞனையும்
நேசிக்கும் ஒவ்வொருவரும்
அவசியம் படித்தின்புறவேண்டியகாவியம் சங்கிலியம்
ஈழநாடு வெளியீடாக வெளிவந்து விற்பனையாகிறது
63 சிவன்கோவில் மேலைவீதியிலுள்ள ஈழநாடு அலுவலகத்திலும், மற்றும் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனையாளர்களிடமும் இந்நூல் கிடைக்கும்.
தனிப்பிரதி விலை: ரூ. 2-50


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கு அரபுநாடுகள் முயற்சி

# லிபியா தலைநகரில் இன்று மாநாடு

## ஈராக்கும், அல்ஜீரியாவும் கூட்டத்தைப்பகிஷ்கரிக்கலாம்

கெய்ரோ, ஆகஸ்ட் 2

**மேற்காசிய அமைதிக்கான அமெரிக்க யோசனைகளை ஐக்கிய அரபுக்குடியரசும், இதர சில அரபு நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளதினால் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் சம்பந்தமாக லிபியாத் தலைநகரில் நாளைய தினம் அரபு நாட்டுப் பிரதிநிதிகள் கூடி ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார்கள்.**

இந்த மாநாட்டில் ஏழு அரபுநாடுகள் கலந்துகொள்ளக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அல்ஜீரியாவும், ஈராக்கும் இந்த மாநாட்டைப் பகிஷ்கரிப்பதற்கு முடிவுசெய்துள்ளன. அமெரிக்க யோசனைகளை ஏற்றுக்கொண்டுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு, சூடான், ஜோர்டான் ஆகிய நாடுகள் தமது முடிவை மீண்டும் மறுபரிசீலனை செய்வதற்கு ஒப்புக்கொள்வதானால் மாநாட்டில் கலந்துகொள்ளத் தயாரென்று ஈராக் அறிவித்திருக்கிறது.

லிபியாவில் நடைபெறவிருக்கும் அரபு நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இதர எல்லா அரபு நாடுகளிலுமிருந்தும் தூது கோஷ்டிகள் புறப்பட்டுள்ளன. அரபு நாடுகளில் இயங்கும் கொமாண்டோ ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் லிபியாவுக்குப் புறப்பட்டுள்ளார்கள்.

### கெய்ரோவில் சோவியத் விமானத் தளபதி

சோவியத் விமானப்படை தளபதி ஒருவர் இப்பொழுது கெய்ரோவுக்கு விஜயஞ்செய்திருக்கிறார். இவரது வருகை பற்றி முன்கூட்டியே எதுவும் அறிவிக்கப்படவில்லை. அவரது விஜயத்துக்கான காரணமும் தெரியவில்லை.

இதே சமயம் லெபனான் பிரதம மந்திரி திரு. ரஸீத் கராமியும் கெய்ரோவுக்கு வந்திருக்கிறார். மேற்காசிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகள் சம்பந்தமாக திரு. கராமி எகிப்தியத் தலைவர்களுடன் ஆலோசனை கலக்க வந்திருப்பதாகத் தெரிகின்றது.

பாலஸ்தீனக் கொமாண்டோ இயக்கங்களில் ஒன்றான அல்பத்தாஹ் தலைவர் யாஸிர் அரபாத்துக்கு ஐக்கிய அரபுக்குடியரசு, கெய்ரோ வரும்படி அழைப்பு விடுத்திருக்கின்றது.

மேற்காசிய அமைதிக்காக அமெரிக்கா தெரிவித்த யோசனைகளை எகிப்து, ஜோர்டான், லெபனான், சூடான் போன்ற நாடுகளும் இஸ்ரேலும் ஏற்றுக்கொண்டுள்ள அதே வேளையில் ஈராக், அல்ஜீரியா போன்ற அரபு நாடுகளும், கொமாண்டோ ஸ்தாபனங்கள் பலவும் அதனை நிராகரித்துள்ளது. அரபு நாடுகளுக்குள்ளேயே பெரும் பிளவு ஒன்றை உருவாக்கிவிடக்கூடுமென்று அஞ்சப்படுகின்றது. இந்த நாடுகளுக்கிடையில் உருவாகியுள்ள கருத்து வேற்றுமைகளைப் போக்கிக்கொள்ளும் விதத்தில் லிபியாவில் அரபு நாடுகளின் பிரதிநிதிகள் நாளைய தினம் கூடுகிறார்கள். இந்தக் கூட்டத்தில் உடனடியாக முடிவு எதுவும் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இம்மாநாடு அநேகமாகப் பல நாட்களுக்கு நீடிக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி

திருவனந்தபுரம், ஆக 2

கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படவிருக்கின்றது. அச்சுத மேனன் மந்திரிசபை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

— —

## குட்டி யானையைக் கொன்றவரை தாய் கொன்றது

கொஹிமா, ஜூலை 2

குட்டியானை ஒன்றைச்சுட்டுக் கொன்ற ஒருவரை தாய் யானை மிதித்துக்கொன்றது.

இச்சம்பவம் கொஹிமாவிலிருந்து 80வது மைலிலுள்ள காட்டில் நடைபெற்றது. நாகாலாந்தில் தலைமறைவாகத் திரிந்த என் கல்லி என்ற நாகர் தலைவரே யானையால் மிதிபட்டு இறந்தவராவர், இவர் யானைக் குட்டியை முன்பு கொன்றதை மனதில் வைத்திருந்த யானை சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இவரை பழிவாங்கியுள்ளது.

— —

## இப்படியும் நடக்கிறதாம்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்முறை ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்மாணவர்களை அடுத்த வருடம் பாடசாலையிலிருந்து நீக்கிவிடப் பெற்றோரின் சம்

## 26 பிள்ளைகளைப் பெற்றதாய்க்கு மேலும் குழந்தை பெறவிருப்பு!

மான்டிமிலேட்டா, ஆக. 2

26 குழந்தைகளைப் பெற்றும் நிறைவு காணாது மேலும் பிள்ளைகளைப் பெறுவதற்கு ஒரு தாய் விரும்புகிறாள்.

இவ்வாறு விரும்புபவர் நெப்பிள்ஸிலிருந்து 30-வது மைலிலுள்ள ஊரைச் சேர்ந்தவரான திருமதி ரோஸா ஸாரோ என்பவர். அண்மையில் குழந்தைகளை ஆசிகூறவந்திருந்த உறவினரிடம் எனக்கு மேலும் ஆறு குழந்தைகள் வேண்டும் என்று இத் தாய் குறிப்பிட்டிருக்கிறார்.

திருமதி ரோஸா ஸாரோவுக்கு இப்போது 48 வயதாகின்றது. இவரது வயிற்றில் பிறந்த 26 குழந்தைகளில் தற்போது 14குழந்தைகள் மட்டுமே உயிரோடுள்ளன. இவருக்குத் திருமணமாகி 31 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

ஆனால் திருமதி ரோஸா ஸாரோவைவிட 32 குழந்தைகளை பெற்ற தாய் ஒருத்தி 2-வது உலகமகா யுத்தத்திற்கு முன்பு இத்தாலியில் இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'வீணை இன்பத்தை விபரிக்க முடியாது'

— சிட்டிபாபு

கோட்டை, ஞாயிறு

"மேடையில் அமர்ந்து நான் வீணைமீட்டும்போது பெறுகின்ற இன்பம் விபரிக்க முடியாது. என்னை மறந்து உணர்வினால் நான் இழுத்துச் செல்லப்படுகிறேன்" என்று பிரபல வீணை வித்துவான் சிட்டிபாபு சொன்னார்.

சிங்கப்பூர்செல்லும் மார்க்கத்தில் சிட்டிபாபுவை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்

அவர் சில நிமிட நேரம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில்தங்கியபோது சொன்னதாவது:

பாபு யூகோஸ்லவியா, பல்கேரியா. ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கு ஏழு வாரச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தனது வீணைநாதத்தால் பலரின் இதயங்களைக் கவர்ந்தார்.

நான் அங்கு கண்டதுதான் என்ன என்றுதானே நீங்கள் கேட்கிறீர்கள் இதோநானே சொல்லிவிடுகிறேன். நிரம்பவும் பிரியத்துடன் கச்சேரிககுச் செவிமடுக்கின்றனர் மண்டபங்களில்மௌனமாக அமர்ந்திருந்து இசையை உணர்ந்து கேட்கின்றனர். நமது இசை இசையாகப் பரிமளிக்கும்போது அவர்கள் நம்மீது காட்டும் அன்பு மகத்தானது. இசை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு விசேட தனி மண்டபம் உண்டு. நாடகங்களை, இசை நிகழ்ச்சி நடாத்தும் மண்டபங்களில் மேடையேற்ற மாட்டார்கள். இதுபற்றி நாம்ஊன்றிக்கவனிக்கவேண்டும். அதுவும் நமது இசையைக் கற்றுக்கொள்ளுவதில் ஆர்வம் பெருக்கெடுத்து நிற்கிறது என்றார் பாபு.

### 'என் அப்பா இசைப்பிரியர்'

எனது அப்பா ஒரு பெரிய இசைப்பிரியர். அவர்கள் என் வாசிப்பைக் கண்டு வியப்பதுண்டு. ஆந்திராவைச் சேர்ந்த நான் பன்னிரண்டாவது வயதிலேயே என் கச்சேரியை அரங்கேற்றம் செய்தேன். வீணையைத் தொட்டு நாதம் எழுப்பும்நான் ஏராளமான இளைஞர்கள் வீணை மீட்ட விரும்பி முன்வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன் 1968-ம் ஆண்டு கீதாஞ்சலியின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு இங்கு வந்தேன். மீண்டும் கீதாஞ்சலியின் அரங்கேற்றத்திற்கு வரவிருக்கிறேன் என்றார் பாபு. நாற்பது நிமிடமும் முடிந்தது. அறிவிப்பும் கேட்டது பாபு வணக்கம் சொல்லி விரைந்தார்விமானத்தினுள்.

# கம்பஹாவில் 4 நீதிமன்றங்களிலும் ஒரே வேளையில் சிங்கள விசாரணை

கம்பஹா, ஞாயிறு

இலங்கைச் சரித்திரத்தில் முதற்தடவையாக கம்பஹாவிலுள்ள நாலு நீதிமன்றங்களிலும்இம்மாதம்3-ம்திகதி சிங்களத்தில் விசாரணை ஆரம்பமாகின்றது

கம்பஹா மாவட்ட நீதிமன்றம், மேலதிக மாவட்ட நீதிமன்றம், மாஜிஸ்திரேட் கோர்ட், மேலதிக மாஜிஸ்திரேட் கோர்ட் ஆகிய நான்கிலும் சிங்களத்தில் விசாரணை ஆரம்பமாகும்

இந்த வைபவத்தையிட்டு இரவு முழுவதும் கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் 'பிரித்' ஓதப்படும். நீதி அமைச்சர் திரு. ஜே. எம். ஜெயமான இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

உள்நாட்டு, உள்ளூராட்சி பொதுநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா தொழில் அமைச்சர் திரு. மைக்கல் சிறிவர்த்தன, ஒலிபரப்பு தகவல் மந்திரி திரு ஆர். எஸ், பெரேரா வெளிவிவகார பாதுகாப்பு உதவி மந்திரி திரு, லக்ஷ்மன் ஜெயக்கொடி, கைத்தொழில் உதவி மந்திரி திரு. எஸ்.கே, சூரியாராச்சி, சுகாதார உதவி அமைச்சர் திருமதி சிவா அபயசேகரா, கம்பஹா எம். பி. திரு. ஏ. ரி பலநாயக்கா ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

வைபவம் முடிவடைந்ததும், நான்கு நீதிமன்றங்களிலும், சிங்களத்தில் விசாரணை ஆரம்பமாகும் மாவட்ட நீதிபதிகளான திரு. பிரிந்தா ரணசிங்கா, ஜனாப் எம். ஏ. ஜமில், மாஜிஸ்ரேட்களான திரு. டபிள்யூ பி. என். டி சில்வா, திரு. அகஸ்டின் டி. சில்வா ஆகியோர் விசாரணையை நடத்துவார்கள். நான்கு நீதிமன்றங்களிலும் அன்று சுபநேரமான காலை 11-16 மணிக்கு சிங்கள விசாரணை ஆரம்பமாகும்.

## பாம்பு-நாய் சண்டை

### இரண்டும்ஸ்தலத்தில் மாண்டன

புத்தூர், ஞாயிறு

புத்தூரைச் சேர்ந்த நிலாவரை என்னும் இடத்தில் புடையன் பாம்பொன்றுக்கும் நாய் ஒன்றுக்குமிடையே, நீண்ட நேரமாக நடைபெற்ற போராட்டத்தில் நாயும்-பாம்பும் ஸ்தலத்திலேயே இறந்தன. நாய்க்கும், பாம்புக்குமிடையே நடைபெற்ற இப்போராட்டத்தைப்பலர் பார்த்துக் கொண்டு நின்றனர். பாம்பினால் கடியுண்ட நாய் வெறிகொண்டு பாம்பை கடித்து துவம்சப்படுத்தியது.

## 'பல நாவலர்கள் தோன்ற வேண்டும்'

— அமிர்தலிங்கம்

சுழிபுரம், ஞாயிறு

'இன்று நாவலர் புகழ் அவரது பெருமைகள் யாவற்றையும் பேசும் நாம் அவருடைய அஞ்சா நெஞ்சத்தையும் வீரத்தையும் தத்தமது வாழ்வில் கைக்கொள்ள வேண்டும். நாவலரை புதிதாகக் கண்டவர்கள் போல் சிலர் ஆராய்கின்றனர். தென் இலங்கையில் உதித்த அநாகரிய தனபாலாவுக்கு பெரும் புகழ் சூட்டும் அரசாங்கம். நாவலரைப் புறக்கணிப்பது ஏன் என்பது புரியவில்லை. யாவருக்கும் முன் வழிகாட்டியவர் நாவலர். எமது தேவையை நிறைவேற்ற உதித்த ஓர் அவதார புருஷராவர்'.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்ட நாவலர் சரித்திர ஆராய்ச்சி நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வழக்கறிஞர் திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவை பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா மங்கல விளக்கேற்றி வைக்க வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தன் தொடக்கி வைத்தார்.

பண்டிதர் க. மயில்வாகனம் வரவேற்புரை கூறினார்.

திரு அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

நாவலர் வாழ்ந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் தமது சமயத்தை வளர்க்க சைவ சமயத்தை அழிக்க முற்பட்டனர், அன்று சைவத்தைக் காத்து சைவ சமய பாடசாலைகளை உருவாக்கி செயல்படச்செய்ததால்தான்இன்று நாம் சைவர்களாக வாழ்கின்றோம்.

அன்று பாதிரிமார் கள் எமது சமயத்தை அழிக்க

...காகும். இந்த அழிவில் இருந்து காக்க பல நாவலர்கள் தோன்றவேண்டும்.

நூலை வெளியிட்டு வைத்த கொழும்பு மெய்கண்டான் அச்சக உரிமையாளர் திரு நா. இரத்தினசபாபதி பேசுகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி 57 வருடங்கள் வாழ்ந்து மறைந்த நாவலர் பெருமான் இன்று எமது நெஞ்சங்களில் தமிழன்பர் தம் உள்ளங்களில் நிலையாக வாழ்கின்றார், இவர்தம் புகழ் ஒளி தமிழ்கூறும் நல்லுலகம் எல்லாம் பரவியுள்ளது. இவர்தம் திருவுருவம் சிலையாக வடிக்கப்பெற்று நிலையாக அமைந்துள்ளது. தமிழ் சைவம் என்னும் இவை இரண்டும் தமது இருகண்களெனக் கொண்டு தொண்டாற்றினார் நாவலர் பெருமான், நாவீறு படைத்த நாவலர் சைவக் காவலராகவும்- நல்லநூல் ஆசிரியர் உரையாசிரியர் பதிப்பு ஆசிரியராக திகழ்ந்தார். ஈழத்தில் முதன்முதல் அச்சுக்கூடம் அமைத்த தமிழரும் இவரேயாவர். இப்படியான ஒருவரின் வாழ்வை ஆராய்ச்சி செய்து வெளியிடுவது சாலவும் பொருத்தமாகும். இந்நூல் வருங்காலசமூகத்திற்கும் தற்போது கல்வி பயிலும் மாணவர்களுக்கும் பெரும் பயனை கொடுக்கும் என்பது திண்ணம்என்றார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வடமாநிலக் கல்வியதிபதி திரு வெ. சங்கரலிங்கம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர் பண்டிதர் செ. துரைசிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். நூலாசிரியை பண்டிதை திருமதி பொ. பாக்கியத்துக்கு காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் பி. எஸ். குமாரசாமியால் பொற்கிழி வழங்கப்பட்டது.

# உலக அமைதிக்கு

# சில்லையூருக்கு பொன்னாடை!

## அவரின் 25 ஆண்டுகால

## ஓய்வு பெற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியே எதுவும் அறிவிக்கப்படவில்லை. அவரது விஜயத்துக்கான காரணமும் தெரியவில்லை.

இதே சமயம் லெபனுன் பிரதம மந்திரி திரு. ரஸீத்

டத்தில் உடனடியாக முடிவு எதுவும் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இம்மாநாடு அநேகமாகப் பல நாட்களுக்கு நீடிக்கலாம் என்று கருதப்படுகின்றது.

# உலக அமைதிக்கு சர்வதேச ஒருமைப்பாடு

## கொஸிஜின் வற்புறுத்து

மாஸ்கோ, ஆகஸ்ட் 2

உலக அமைதிக்கு சர்வதேசரீதியில் ஒருமைப்பாடு நிலவவேண்டும் என்று சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் அழைப்பு விடுத்திருக்கிருர்.

அமெரிக்க அதிபர் நிக்ஸன் பிரான்ஸ் அதிபர் பொம்பிடோ. பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் ஆகியவர்களுக்கு திரு கொஸிஜின் அனுப்பியுள்ள செய்தியில் இந்த அழைப்பை விடுத்திருக்கிருர்.

கடந்த உலக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள ஐரோப்பிய பிரச்னைகள் பற்றி ஆராய்வதற்கான ஒரு மாநாடு நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிருர்.

# அதிகாரக்குவியல் எதுவும் இல்லை

— திருமதி காந்தி

புதுடில்லி, ஆக. 2

மத்திய அரசாங்கத்தின் நோக்கம் நியாயமாகவும் நேர்மையாகவும் தேர்தல்களை நடத்துவதே என்று பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி லோக சபையில் தெரிவித்தார். கடந்த 20 வருடங்களாக ஒரு சுதந்திரமான தேர்தல் கமிஷனின் கீழ் வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன; அந்த முறையின் மீது அவதூறு கிளப்பும் முயற்சியைத் தாம் கண்டிப்பதாக அவர் சொன்னுர்.

திரு. மதுலிமாயி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு திருமதி காந்தி பதிலளித்தார். கேரளத் தேர்தல்களில் தில்லுமுல்லு செய்ய முயற்சிசெய்வதாகவும் தனிப்பட்ட முறையில் சர்வாதிகாரியாகி வருவதாகவும் திருமதி காந்தியின் அரசாங்கத்தின் மீதும் திருமதி காந்தியின் மீதும் திரு. லிமாயி குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்குப் பதில் அளித்துப் பேசியபோது. ''எந்தக் கட்சி தேர்தல் வெற்றியடைகிறது என்பதைப் பற்றித் தமக்கு அக்கறை இல்லை என்றும் தம்முடைய கட்சி வெற்றி பெறுவதைத் தாம் அதிகம் விரும்பக் கூடும் என்ருலும் தேர்தல்களிலுள்ள நியாயத்தையும் நேர்மையையும் பலியிட்டு விட்டு எந்தக் கட்சி வெற்றி பெறுவதையும் தாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறிஞர்.

இந்தியாவில் உள்ள நாம் எல்லோரும் ஒரு விஷயத்தில் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஏதோ ஓரிரு இடங்களில் தேர்தல்களில் கோளாறு இருந்திருக்கலாம் ஆனுலும் பொதுவாக நம்முடைய தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடந்திருக்கின்றன எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக வாக்களிக்க மக்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கின்றன என்று திருமதி இந்திரா காந்தி கூறிஞர்.

நம்பிக்கையில்லாத்தீர்மானம் தோல்வியடைந்தது

— ●

## தந்திக் கம்பிகளைக் கைப்பற்றினர்

சங்கானை, ஞாயிறு

பொலிசாருக்குக்கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து சங்கானைப்பொலிசைச் சேர்ந்த திலகரத்ன. விஜய சிறிவர்த்தன ஆகியோர் யாழ்ப்பாணக் கடையொன்றைத் திடீர் சோதனையிட்டபோது தபால் தந்தி இலாகாவுக்குச் சொந்தமானதும் களவாடப்பட்டதெனக் கருதப்படுவதுமான தந்திக் கம்பிகள் அங்கிருக்கக்கண்டனர். கம்பிகளைக் கைப்பற்றிய அவர்கள் சந்தேகத்தின் பேரில் தங்கன் என்பவரைக் கைதுசெய்து வாக்குமூலத்தைப்பதிவுசெய்தபின் பிணையில் விடப்பட்டுள்ளார்.

## இப்படியும் நடக்கிறதாம்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்முறை ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்மாணவர்களை அடுத்த வருடம் பாடசாலையிலிருந்து நீக்கிவிடப் பெற்ருேரின் சம்மதக்கடிதங்களைக் கேட்கிருர்களாம் சில கல்லூரி அதிபர்கள்.

ஜி. சி ஈ பரீட்சைக்கு அனுமதிப்பதற்காக பாடசாலைகளில் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைகளில் 6 பாடங்கள் சித்திஎய்திய மாணவர்களை மட்டுமே சிலபாடசாலைகள் அரசாங்க பரீட்சைக்கு அனுமதிக்கின்றன. 5 பாடங்களும் அதற்குக்குறைவாகவும் சித்தி எய்தும் மாணவர்களை பெறுபேறுகள் வெளியானதும் வெளியேறச் சம்மதித்தால் மட்டும் பொதுப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கல்லூரி அதிபர்கள் கூறுகிருர்களாம். இதற்கான சம்மதக் கடிதங்களையும் பெற்ருேரிடமிருந்து கேட்கின்றனராம்.

3 தடவை ஜி. சி. ஈ. பரீட்சைக்குபாடசாலையில்இருந்து கொண்டே தோற்றலாம் என கல்வி அமைச்சு அறிவித்திருக்கும் இவ்வேளையில், சில கல்லூரிகளில் நடைபெறும் இதுபோன்ற சம்பவங்கள் மாணவர்களையும் பெற்ருேரையும் பீதிக்குள்ளாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் மகாவித்தியாலயமொன்றில் இதுபோன்ற சம்மதக்கடிதங்கள் பெற்ருேரிடமிருந்து கோரப்பட்டுள்ளனவாம்.

— —

சேகுவேரா

## இரகசிய மகாநாடு

மாத்தறை, ஞாயிறு

'சேகுவேரா' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்ட நால்வரை மாவநல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தறைப்பகுதியிலுள்ள பென்கமுவா என்னுமிடத்திலுள்ள ஒரு தேயிலைத் தோட்டத்துக்கருகே மேற்குறிப்பிட்ட சேகுவேரா இயக்கத்தினர் இரகசியமகாநாடு நடாத்திக்கொண்டு இருக்கும் பொழுதே பொலிசார் கைதுசெய்தனர்.

அவர்கள் மகாநாடு கூடிய இடத்தில் பொலிஸார் ஒரு களவுபோன சைக்கிளையும் கண்டுபிடித்துள்ளனர். மேற்படி இயக்கத்தினர் சம்பந்தமாக பொலிஸார் மேலும் விசாரணை நடாத்துகின்றனர்.

...து இசை இசையாகப் பரிமளிக்கும்போது அவர்கள் நம்மீது காட்டும் அன்பு

பாபு வணக்கம் ... விரைந்தார்விமானத்திஞள்.

# சில்லையூருக்கு பொன்னுடை!

## அவரின் 25 ஆண்டுகால இலக்கிய சேவைக்கு புகழ்மாலை



யாழ்ப்பாணம், ஞாயிறு

'சிற்றூரான சில்லாலை தந்த தாஞலும் அந்த முத்து ஈழம் முழுவதும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பது மட்டுமல்ல இந்தியாவிலும் ஒளி பரப்ப வேண்டிய நல்ல முத்து. பாவும் பாநடையும் சிறப்புறக் கவி அமைத்து கற்ருேரும் மற்ருேரும் போற்றி நெஞ்சில் நீங்காத இடத்தைப் பெற்ற கவிஞர் சில்லையூர் செல்வராசனுகும். அவரது பல்லாண்டுகால இலக்கியப்பணியை கௌரவிக்கும் பொருட்டு அவர் பிறந்த ஊரிலேயே விழா எடுப்பது மிகவும் பொருத்தமானதாகும்.' என்று,

கவிஞர் முருகையன், சில்லையூர் செல்வராசனை அவரது 25 ஆண்டுகால இலக்கியப் பணிக்காக பொன்னுடை போர்த்தி சில்லாலையில் கௌரவித்துப் பாராட்டி நடைபெற்ற விழாவில் பேசுகையில் கூறிஞர். கத்தோலிக்க வாலிபர் சங்கத்தின் 18-வது ஆண்டு விழாவில் இவ்வைபவம் நடைபெற்றது. வித்துவான் க. ந. வேலன் பேசுகையில் உடலில் அழகு, உள்ளத்தில் அழகு, உடையில்அழகு என எவ்வழியிலும் அழகுடன் வாழ வேண்டும் இந்த அழகில் இருந்துதான் இலக்கியம் மற்றும் கலைகள் பிறக்கின்றன. இதுவே என் நம்பிக்கை. சில்லையூர்செல்வராசன் அழகுடையவர். அதனுல் அவருக்குக் கவிதை வருகிறது இலங்கையில்எத்தனையோ கவிஞர்கள்உண்டு. அவர்கள் யாவரும் பாராட்டப்படவில்லை. ஆனுல் இந்த இளம் வயதிலேயே சில்லையூர் செல்வராசா பாராட்டப்படுகின்ருரென்ருல்அதற்குக் காரணம் அவருக்கு இளமையில் அன்னை அளித்த அன்பும் அறிவுமேயாகும். பொன்னுர் மேனியனுய் இருக்கும் திரு. செல்வராசன் சிறந்த கவிஞன் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. மற்றவர்கள் வளர்வதற்குத் தூண்டுகோலாய் இருக்கும் பழக்கம் தமிழர்களுக்கு இல்லைப்போலும். அதனுல் தான்தோன்றிக்கவிராயர் தாஞகவே தோன்றிஞர். மக்களின் அறியாமையைச் சாடிஞர். நையாண்டிப் பாடல்கள்மூலம் பல கருத்துக்களை முன்வைத்தார், ஆனுல் இன்று மக்களால் விழாவெடுக்கும் தகுதி பெற்ருர் என்ருர்.

கட்டைக்குடு சவரிமுத்து அடிகள் 'தான்தோன்றிக் கவிராயர்' சில்லையூர்செல்வராசனுக்கு பொன்னுடை போர்த்திஞர்,

தாயின் பரிவையும் சில்லாலையில் தான் வாழ்ந்த இளமைப் பிராயத்தையும் கல்வியைப் போதித்து தன்னை ஆளாக்கியவர்களையும் நினைவுகூர்ந்து சில்லையூர் செல்வராசன் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தான் ஏதோ பெரிதாகச் செய்துவிட்டதாக மக்களும் பெரியோர்களும் நினைக்கின்றனர். ஆனுல் இனித்தான் என் இலக்கிய வாழ்வு தொடங்குவதாகக் கருதுகிறேன் என்ருர்.

வண. சவரிமுத்துஅடிகள் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் பலரும் பாராட்டிப் பேசினர்.

— —

## ச.ச. நிலைய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை. ஞாயிறு

ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் சனசமூக நிலைய 27-வது வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஈ. எம். யோசவ் உபதலைவர்கள் எஸ். செபமாலைமுத்து. செயலாளர் எம். எவ் அல்பேட், தனதிகாரி: எம். சூசைபாலன்,

17 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

...தைப்பலர் பார்த்துக் கொண்டு நின்றனர். பாம்பிஞல் கடியுண்ட நாய் வெறிகொண்டு பாம்பை கடித்து துவம்சப்படுத்தியது.

## ஓய்வு பெற்ருர்

புத்தூர், ஞாயிறு

நவக்கிரி அரசினர் தமிழ்க்கலன் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. து. தம்பையா தமது அறுபதாவது வயதில் கடந்தமாதம் 22-ம் திகதியிலிருந்து ஓய்வு பெற்ருர். இவர் தனது கிராமத்தின் வளர்ச்சிக்காகப் பல தொண்டுகள் ஆற்றியுள்ளார். ஈவினை-புன்னலைக் கட்டுவன் வடக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக நீண்டகாலம் பணிபுரிந்தவர்.

— —

## உணவில் விஷம்! 15 பேர்ஆஸ்பத்திரியில்

மாத்தளை, ஞாயிறு

உணவில் விஷம் கலந்ததின் காரணமாக ஒரு வியாபார ஸ்தலத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பலர் மாத்தளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

உணவில் விஷம்கலந்ததின் காரணமாக 15 பேர் வயிற்ருேட்டத்துக்கு இலக்காகி மிக அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிருர்கள்.

உணவுக்காக பயன்படுத்தப்பட்ட மீனில் விஷம்கலந்திருந்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும் என்று மேற்குறித்த வியாபார ஸ்தலத்தின் உரிமையாளர்கூறிஞர்.

— —

## தென்னைக்கு காணி வழங்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

பூநகரி - கிராஞ்சிப்பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கைக்கான நிலம் வழங்கும் காணிக்கச்சேரி இன்றுயாழ். கச்சேரியில் நடைபெறும்,

கிராஞ்சிப்பகுதியில் முன்னர் ஒரு காணிக்கச்சேரி மூலம் பலருக்கு காணிகள் கொடுக்கப் பட்டதென்றும், அவர்களுள் பலர் காணிகளை அபிவிருத்தி செய்யாமையால் காணிகள் திருப்பிப் பெறப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது'

இம்முறை நடைபெறும் காணிக்கச்சேரியில் ஏற்கெனவே காணிகளைத் திருத்திசீர்படுத்தக்கூடியவர்களுக்கும் பொருள் வசதி உள்ளவர்களுக்குமே காணி வழங்கப்படுமென்று அறியப்படுகிறது. (கு. வி, ம.)

சமயத்தை வளர்க்க சைவ சமயத்தை அழிக்க முற்பட்டனர். அன்று சைவத்தைக் காத்து சைவ சமய பாடசாலைகளை உருவாக்கி செயல்படச்செய்ததால்தான்இன்று நாம் சைவர்களாக வாழ்கின்ருேம்.

அன்று பாதிரிமார்கள் எமது சமயத்தை அழிக்க கையாண்ட வழிகளிலும் பார்க்க இன்று புத்தசமயத்தவர்களுடைய ஓர் நெருக்கம் எமது பகுதி மக்களுக்கு ஏற்பட்டு வருகின்றன. புத்த சமயத்தவர்களாக மாறுபவர்களுக்கு சில சலுகைகள் கொடுத்து எமது இனத்தை அழிப்பதே நோக்

பண்டிதர் செ. துரைசிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். நூலாசிரியை பண்டிதை திருமதி பொ. பாய்க்கியத்துக்கு காரைநகர் இந்துக கல்லூரி அதிபர் பி. எஸ். குமாரசாமியால் பொற்கிழி வழங்கப்பட்டது.

செல்வி சோ: யோகலட்சுமி புலவர் திரு கா. வேல்முருகன் பி. ஓ. எல், ஆகியோரால் நூலாய்வுரை நிகழ்த்தப்பட்டது: பண்டிதர் திரு அ, ஆறுமுகம் நன்றியுரை கூறிஞர். இரத்தப் பரிசு வரலாற்று நாடகம் நடிக்கப்பட்டது.

# 'தமிழர் ஒவ்வொருவரும் விழிப்புடனிருக்க வேண்டும்'

— சாவகச்சேரி எம். பி.

சுழிபுரம், ஞாயிறு

''தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவரும் விழிப்பாக இருந்து அரசாங்கத்தால் எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தக்கபலன் காண வேண்டியவர்கள் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் மனதில் கொள்ள வேண்டும். திரு. அமிர்தலிங்கம் இன்று ஆட்சி மன்றத்தில் இல்லாதது பெரும் குறையாகும்'' என வடலியடைப்பு தமிழரசு வாலிப முன்னணியினரால் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. அமிர்தலிங்கம் தலைமைவகித்தார்.

விழாவுக்கு முன்னர் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது நூற்றுக்கணக்கான வாலிபர்கள்கலந்துகொண்டனர்.

வடலியடைப்பு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகாமையில் நடைபெற்ற விழாவில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, மேல் சபை உறுப்பினர், என். நடராசா திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மு. ஆலாலசுந்தரம், செல்வன் சி. மகேந்திரன் செல்வி ச. சர்வாஜினி தேவி உட்பட மற்றும் பலர் பேசினர் மூன்று நாடகங்கள் மேடை யேற்றப்பட்டன.

'சங்கானை

## விறகு காலையை மூடாதீர்'

சங்கானை, ஞாயிறு

சங்கானையில்உள்ள மரக்கூட்டுஸ்தாபனத்திற்குச் சொந்தமானவிறகுகாலையை மூடுவதென்று மரக்கூட்டுஸ்தாபனத்தார் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து பொது மக்கள் கடும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளனர். சங்கானைப் பட்டின சபை மாதாந்தக் கூட்டத்தில் இவ்விறகு காலை கடந்த 23 வருட காலம் இயங்கிவருவதெனவும் இதனை அகற்றும் பட்சத்தில் பொதுமக்கள் பலதரப்பட்ட இன்னல்களை அடைய நேரிடுமென்றும், ஆகவே விறகு காலை அகற்றப்படக்கூடாது என்றும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. ஊடாக மரக்கூட்டுஸ்தாபனத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## வங்கிக் குழு வருகிறது

கோட்டை, ஞாயிறு

இம்மாதம் உலகவங்கித் தூதுக்குழு ஒன்று இலங்கை வரவிருக்கிறது. தேசிய அரசாங்கம் உலகவங்கியிடம் ஒழுங்குசெய்த மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டக் கடன் குறித்து தற்போதைய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தவே மேற்படி குழு இலங்கை வருகிறது.

மொறட்டுவ, ஞாயிறு

'இன, மத அரசியல் வேறுபாடுகளை விடுத்து மனித குலத்துக்கு சேவை செய்தலையே ஒருவன் தன் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும்.' இந்த வேறுபாடுகள் யாவும் மக்களிடையே நிலவும் மிகச் சிறிய பூசல்களாகும்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சூரியன் ஒளியினுல் இயற்கைப்பொருள்கள் இயல்பாகத் தொழிற்படுவதுபோல் இறைவன் ஞானகுருவாக வந்து ஆன்ம ஈடேற்றத்துக்கு அருள்பாலிக்கின்ருர். நம்மீதுள்ள பெருங் கருணையினுலேதான் பெருமான் நம்மை உய்விக்க மானிடச் சட்டை சார்த்தி வருகின்ருர்.

— மாசிலாமணி தேசிகர்.

ஈழநாடு
Eelanadu National (Tamil) Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம்
18-ந் திகதி (3 - 8 - 70)

## தெய்வமே வழிகாட்டுக!

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் விஷயமாக பிரதமர் உள்ளிட்டு அரசாங்கம் தலையிட்டதன் பயனுக நிலைமை சீர்படுவதற்கு பதில் மிக மோசமடைந்துள்ளதையே பார்க்கிறேம். இம்முறை திருவிழா நின்றதுடன் பூசையும் பல வாரங்கள் தடைப்பட்டன. தேர்களுக்குத் தீ வைத்துள்ளனர்; வெடிகுண்டு வீச்சுகள்; பொலிஸ் தடியடி, கைகலப்பு முதலியவையெல்லாமும் ஏற்பட்டுள்ளமை சிறப்பாக சைவசமயத்தவருக்கு மிகவும் மனவேதனை அளிப்பதாகும். கோயில் பூசைக்குத் தடை ஏற்படுமாயின் அது அரசுக்கும் மக்களுக்கும் பெருங்கேடாகுமென்பது ஆன்றேர் வாக்கு. இனி என்ன ஆகுமோ என்று பெருங்கவலை ஏற்படுவதாகவுள்ளது.

இந்த அவல நிலையை மாற்றவேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, கோயில் நிர்வாகிகளுக்கும், ஹரிஜனங்கள் உள்ளிட்டுப் பொதுமக்களுக்கும் பெரிதும உண்டு. புகழ்பெற்ற மாவைக்கந்தன் கோவில் திருவிழாவும் பூசையும் நின்றுவிட்டதைப்பற்றி யாரும் மகிழ்ச்சியடைவதற்கில்லை, இதற்கு மாருக சைவசமயிகள் எல்லாருமே துக்கமும் வெட்கமும் படவேண்டும். பலாத்காரத்தால் இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாமென்றும் யாராவது எண்ணுவதாயின் அதைவிடப் பெரிய தவறு வேறு இருக்கமுடியாது. எந்த விஷயத்திலும் சரி பலாத்கார வழி மூலம் நிலைமை மேலும் சிக்கலாகுமேயன்றி, இதனுல் நல்ல தீர்வைக் காண இயலாதென்பது அனுபவம் கண்ட உண்மை.

இவ்வருடம் ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டு இம் முக்கியமான சமூகப் பிரச்னையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு வேறு என்ன மாற்றுவழி என்பதை இதில் சம்பந்தப்பட்ட பல தலைவர்களும் கூடி நிதானமாக ஆலோசித்தால். இதற்கு நல்லதோர் வழி காண்பது அசாத்தியமல்ல. சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றும், புதிய சட்டம் நிறைவேற்றவேண்டுமென்றும் சிலர் கூறலாம். ஆனுல் சட்டத்தால் மட்டும் இது தீரக்கூடிய விஷயமல்ல. தெய்வபக்தியை வளர்ப்பதற்கே கோயில்கள் ஏற்பட்டன. நமது பல இன்னல்களையும் தெய்வமே தீர்க்க வல்லது என்ற பக்தியும் உண்மையான நம்பிக்கையும் இதில் சம்பந்தப்பட்ட பலருக்கும் இருக்குமாயின் தெய்வ அருளால் ஒரே கணத்தில் மனமாறுதல்கள் ஏற்பட்டு, மலைபோன்ற பிரச்னைகள் எல்லாம் பனிபோலத் தீருவதுசாத்தியமே. மனிதர்களால் முடியாதது தெய்வத்தால் ஆகுமென்பது ஆஸ்திகர்களின் நம்பிக்கை. அடுத்தவருடமாவது இக்கோயிலில் திருவிழாக்கள் வழக்கம்போல் சிறப்பாக நடைபெறவும், பூசை வழிபாடுகள் எல்லாம் தட்டாமல் நடக்கவும் வேண்டுமென்றும், அக்கோயில் திருப்பணி வேலைகள் நன்கு பூர்த்தியாகி அந்த ஊர் மக்களிடையே அன்பும் ஒற்றுமையும் பலப்படஎல்லாம் வல்ல அந்த கந்தசுவாமியே திருவருள் பாலிக்கவேண்டுமென்று மனப்பூர்வமாக பிரார்த்திக்கின்றேம். மனிதரால் முடியாதது பிரார்த்தனையால் முடியுமென்ற வாக்கு பொய்யாமா?

சுவிட் சர்லாந்தின் அரசியல் அமைப்பு (2)

# மொழி, சமய அடிப்படை உரிமைகள்: வாக்கெடுப்பு மூலம் சம அந்தஸ்து

(நேற்றையதொடர்ச்சி)

1874-ம் ஆண்டில் சமஷ்டி அரசியல் அமைத்து அதில் 22 'காண்டன்' என்ற மண்டலங்களையும் இணைத்தனர். இதில் மூன்று காண்டன்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காண்டனுக்கும் நிர்வாக சுயாட்சி அதிகாரம் அதிகமாகவுள்ளதென்பதைப் பார்த்தோம். தேசிய ஆதிபத்திய அதிகாரம் இரு சபைகள் உள்ள பார்லிமெண்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'ஸ்டான்டிராட்' என்ற அரசாங்க சபைக்கு ஒவ்வொரு காண்டனும் இருபிரதிநிதிகளை அனுப்புகிறது. அரைக்காண்டன் ஒரு பிரதிநிதியை அனுப்பும்.

'நஷனல்ராட்' என்ற தேசியசபையிலே மொத்தம் 196 பிரதிநிதிகள் உளர். ஜனத்தொகையில் 22 ஆயிரம் பேருக்கு ஒரு பிரதிநிதி வீதம் தெரிவுசெய்கிருர்கள்.

'பண்டஸ்ராட்' என்ற சமஷ்டி சபையில் ஏழு பிரதிநிதிகள் உளர். அச்சபையிடமே நிர்வாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சமஷ்டி சபையில் உள்ள எழுவரில் ஒருவரே தலைவராக தெரிவு செய்யப்படுகிருர். தலைவரின் பதவிக்காலம் ஒரு வருடம்தான். இவ்வருடம் உபதலைவராக இருப்பவர் அடுத்தவருடம் தலைவராகத் தெரிவுசெய்யப்படுவதுவழக்கம்.

### சர்வஜன வாக்கெடுப்பு

சுவிட்சர்லாந்து அரசியலின் அம்சம் சர்வஜனவாக்கெடுப்புத்தான். அதற்கு 'ரெபரண்டம்' என்பர். பொதுமக்களின் கருத்தை அறியும் முறையே இதுவாகும். இதில் இரண்டு விதம். ஒன்று கட்டாய வாக்கெடுப்பு; மற்றென்று விருப்பத்தைப் பொறுத்தது. பார்லிமெண்டில் நிறைவேறும் சட்டம் செல்லுபடியாக வேண்டுமென்றல் சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் வாக்காளரின் ஆதரவை அது பெறவேண்டும். இது கட்டாய வாக்கெடுப்பு. சமஷ்டி அரசியலில் செய்யும் திருத்தங்கள்

சாதாரண சட்டதிட்டங்களுக்குக்கூட பல இடங்களில் இவ்வித கட்டாய வாக்கெடுப்பு நடக்கிறது. பணச்செலவு சம்பந்தமாகவும் மக்களின் அங்கீகாரத்தைபெற கட்டாய வாக்கெடுப்புநடப்பதுண்டு. ஆகவே ஒவ்வொரு காண்டன் நிர்வாகத்திலும் மக்களே முடிவான தீர்மானம் செய்பவர்கள்.

சோலுர் என்ற காண்டனில் ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட செலவீனம் எதுவும் மக்களின் சம்மதத்தை பெறவேண்டும்.

'விருப்ப வாக்கெடுப்பு' என்பது முப்பதாயிரம்பேர் கையொப்பமிட்டுக் கேட்டுக்கொண்டால், சமஷ்டி அரசாங்கம் செய்யும் எவ்வித ஒப்பந்தம் அல்லது சட்டத்தையும் பற்றி சர்வஜனவாக்கெடுப்பு எடுக்கவேண்டும். இது 1874-ம் வருடம்செய்த ஏற்பாடு. இப்போது ஜனத்தொகை பெருகிவிட்டதால் இந்த எண்ணிக்கை கருதப்படுகிறது. சில காண்டன்களில் சட்டங்கள், செலவினங்கள் இவ்விடயமாகவும் விருப்ப வார்க்கெடுப்பு எடுக்க இடமுண்டு. முடிவாகப் பொதுமக்கள் கையில் 'வீற்றே' அதிகாரம் அளிப்பதாக இதுஉள்ளது. இவ்வித ஏற்பாடு சுவிட்சர்லாந்து, இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குத்தான் ஏற்றதேயன்றி, பெரியநாடுகளுக்கு அனுபவ சாத்தியமற்றதாகும்.

ஒரு கட்சியோ அல்லது பார்லிமெண்டோ நிரந்தரமான ஆதிக்கம் செலுத்த முடியாதபடி சுவிட்சர்லாந்தில் இவ்வித சர்வஜனவாக்கெடுப்புமுறை தடுப்பதாகவுள்ளது. மன்னருக்கு பதில் மக்கள் விசேட அதிகாரத்தைப் பயன்படுத்துகிருர்கள். இதில் சில குறைபாடுகள் இல்லாமலில்லை. என்ருலும் அரசாங்கம் தான் தே[illegible]றித்தனமாக நடக்காமல் இந்தமுறை அவர்களைக் கட்டுப்படுத்தி நிதானமாகக் காரியங்கள் செய்ய உதவுகின்றது.

### நே[illegible]க வாக்கெடுப்பு

வாக்குரிமைபெற்ற எல்லா ஆண்களும் ஓர் இடத்தில் கூடி தங்கள் தங்கள் கவர்னர்களைத் தெரிவுசெய்வதுடன் தங்களுக்கான சட்டதிட்டங்களைச் செய்கிருர்கள். இம்முறையானது சிறிய காண்டன்களுக்குத்தான் உகந்தது.

பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து அதன்படி நடந்துகொள்வதே உண்மையான ஜனநாயகம். சென்ற இரண்டாவது யுத்தகாலத்தில் நாஜிகளின் கொடுமை தாங்காமல் ஏராளமானவர்கள் சுவிட்சர்லாந்தில் தஞ்சம்புக வந்தனர்.

முதலில் அரசாங்கம் உணவுக் கஷ்டம் முதலிய காரணங்களால் இதற்கு சம்மதிக்கவில்லை. ஆனுல் பொதுஜனங்கள், 'எல்லோருக்கும் கொஞ்சம் தாராளமாகதஞ்சம் அளிக்கவேண்டும்' என்பதை ஆதரிக்கவே அரசாங்கமும் அதற்கியையத் தன் கொள்கையை மாற்றிக் கொண்டது.

சுவிட்சர்லாந்தில் பல அரசியல் கட்சிகள் இருப்பினும் கூட்டு அரசாங்கமுறையே நடைமுறையில் உள்ளது. தீவிர ஜனநாயகக்கட்சி, மூன்று பிரதிநிதிகளை ஏழுபேரடங்கியசமஷ்டிசபைக்கு அனுப்பியுள்ளது. சொத்துரிமை உள்ளவர்களின் கட்சியாக இது மதிக்கப்படுகின்றது.

கத்தோலிக்க கன்சர்வேடிவ் கட்சிக்கு சமஷ்டி கவுன்சிலில் இரண்டு ஸ்தானங்கள் உள்ளன. சமதர்ம ஜனநாயக கட்சி மார்க்ஸிய கொள்கையை முதலில் பின்பற்றிய தெனினும் இப்போது தொழிலாளர் யூனியன்தான் ஆதரவு பெற்ற ஜனநாயகமுறையையேபின்பற்றுகிறது. இக்கட்சிக்கு சமஷ்டிசபையில் ஒரு ஸ்தானம் உள்ளது. மற்ருெரு ஸ்தானத்தை விவசாயிகள் கட்சி பெற்றுள்ளது. [illegible]யூனிஸ்ட்டுகள் தங்[illegible]ளை தொழிற்கட்சி என்று அழைத்துக்கொள்கின்றனர். இவற்றைத்தவிர வேறுசில சில்லறைக் கட்சிகளும் இயங்குகின்றன.

களும் புதிய கட்சிகள் ஆரம்பித்துஅரசியலைஒருபொழுதுபோக்காகக் கொள்ளமுடிவதில்லை

### பிரஜைகளின் சுதந்திரம்

சமஷ்டி அரசியலிலும் காண்டன் அரசியலிலும் ஒவ்வொரு பிரஜைக்கும் பல அடிப்படைச் சுதந்திரங்கள் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளன. இது மறுக்கப்படுமாயின் அவர் சமஷ்டி நீதிமன்றத்துக்கு முறையிடலாம். அவரது மனு அனுமதிக்கப்பட்டால், சமஷ்டிச் சட்டம் கூட கைவிடப்படலாம். மொழி, மதம், அரசியல், சமூக சிறுபான்மையினருக்குத்தக்க பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மைப்பலத்தால் இவர்களது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட முடியாது.

சமஷ்டி சட்டதிட்டங்களில் பலவும், இருசட்ட சபைகளிலும் தனித்தனியே விவாதித்து முடிவுசெய்யப்படுகின்றன. இரு சபைகளும் அங்கீகரித்தால் தான் அது சட்ட நடைமுறைக்கு வரும் கருத்துவேற்றுமை ஏற்பட்டால், இருசபைகளும் தெரிவுசெய்யும் ஒரு மத்தியஸ்தக்குழுவின் ஆலோசனைக்கு விடப்படும். அந்த மத்தியஸ்தகுழுவும் ஒரு சமரச முடிவுக்கு வரமுடியாமல் போனுல் அந்த மசோதா கைவிடப்படும் ஆனுல் நடப்பில் இவ்வித நிலைஏற்படுவதில்லை. ஏதாவது சமரச உடன்பாடு ஏற்பட்டு விடும்.

இருசபைகளின் அதிகாரமும் கடமையும் சமமானது. சட்டசபையின் ஆயுள் முடிந்தாலும் எஞ்சியுள்ள விடயங்கள் அத்துடன் காலாவதியாவதில்லை. புதிய சபை அவ்விடயங்களை எடுத்து விவாதித்து நிறைவேற்றும் சபைப்பிரதிநிதிகளுக்கு பிரயாணப்படிச் செலவும், நாளொன்றுக்கு ஒரு சிறிய சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இருசபைகளிலும் காண்டன் அரசாங்கத்தைச்

## ஜயாரன் எழுதுவது:

ஈ. வெ. ரா. பெரியார் மீது மதுரை ஆதீனம் ஒரு வழக்குத் தொடரப்போகிறதாம். தமிழகத்திலே பல இடங்களிலும் 'கடவுள் இல்லை. இல்லவே இல்லை. கடவுளை வழிபடுபவன் ஒரு காட்டுமிராண்டி. கடவுளைப் பற்றிப் பிரசாரம் செய்பவன் ஓர் அயோக்கியன்......' என்றெல்லாம் சுவர்களில் எழுதியிருப்பதுடன் ஈ. வெ. ரா. பெரியார் சிலைகளின் கீழ் எழுதப்பட்டுள்ளன அல்லவா? பெரியாரது இந்தக் கூற்றின்படி, பல குரவர்களும், மகாத்மா போன்றவர்களும் அயோக்கியர்கள் என்ருகும்,

இதைக் குறித்து தமிழக சட்டசபையில் கேள்வி எழுந்தபோது, முதலமைச்சர் அளித்த பதிலில் இதுபற்றி ஆட்சேபித்து யாரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்என்ருர் அவர் இப்படிக் கூறிப் பல மாதங்களாகியும் யாரும் இதுவிஷயமாக நடவடிக்கை எடுக்கவில்லை. முன்னர் சமணம் புகுந்து சைவத்தை அழிக்க முற்பட்டபோது மீண்டும் "வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும்" திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் அவதரித்தார்கள். அவர்களது பெயரால் நடைபெறும் மதுரை ஆதீனம் இப்போது துணிச்சலுடன் முன்வந்து, தெய்வ நிந்தனையான பிரசாரத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடப்போவதாக ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் மூலம் அறிந்தேன்.

இந்த வழக்கு நடைபெறின் விசாரணை விவரங்கள் மிக ருசியாகவும், உலக மக்களின் கவனத்தைக் கவரக் கூடியதாகவும் இருக்கும். நீதிமன்றத்தின் மூலம் தெய்வத்தை நிலைநாட்டமுடியாதுதான். ஆனுல் தெய்வத்தை நம்புகிறவர்களை, அவதூறு செய்வதாவது தடுக்கப்படுமாயின் அதுவே பெரிய காரியம். தட்டிப் பேசவும் ஆளில்லாமற்போவது ஈ. வெ. ரா. பெரியாருக்கே பிடிக்காது. ஈ. வெ. ரா. ஆரம்பித்த இயக்கங்கள் எல்லாமே இதுவரை நல்ல பலன்களை அளித்துள்ளன அதுபோல் இப்போதும் தமிழகத்தில் மட்டுமன்றி இந்தி

பட்டுவிட்டதாகவும், அந்த ஸ்தாபனத்துக்குள் சில வேற்றுமைகள்ஏற்பட்டுள்ளதாகவும் அறியவந்தேன்.

தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து, சமயப் பணிகளைப் பரப்பும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம், எக்காரணம் பற்றியும் தடைப்படுவதாயின் அது பெரிய துரதிருஷ்டமானது. இவ்விதமான ஸ்தாபனம் ஏற்பட்டதே சரித்திரத்தில் ஒரு புதுமை. இந்துசமயத்துக்கு உள்ளும் புறமும் பல ஆபத்துக்கள் வளர்ந்துள்ள இச்சமயத்தில் பல தமிழக மடாதிபதிகளும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க முன்வரமுடிந்ததால் இந்து சமயம் புத்துயிர் பெறுமென்று பலரும் கருதினர். ஆனுல் தெய்வீகப் பேரவை என்ற அந்த ஸ்தாபன வேலைகள் வேற்றுமை காரணமாகத் தடைப்பட்டிருப்பின் அது மிகவும் ஏமாற்றமளிப்பதாகும்

இவ்வேற்றுமைகள் நீங்கி, மீண்டும் அந்த நல்ல ஸ்தாபனத்தின் புனிதப் பணிகள் வளர்ந்தோங்கத் திருவருளே கூட்டவேண்டும்.

0 0 0

திருக்கோணமலையிலே பண்ணிசைப் புலவர் வே. சிவஞானம் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டுவிழா மலர் கிடைத்தது பல அன்பர்களும், ஸ்தாபனங்களும் அவரையும், அவரது தெய்வீகப் பணிகளையும் அச்சிறப்பான மலரில் பாராட்டியிருக்கிருர்கள். திருகோணமலை அரசாங்க அதிபரான சோமபால குணதீர என்ற சிங்கள பௌத்தர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், "பன்முறையும் திரு. சிவஞானத்தின் பக்திப் பாடல்களைக் கேட்டிருக்கின்றேன். அவரது இசை என்னைப் பெரிதும் கவர்ந்ததுடன், என் உள்ளத்தையும் உருக்கியுள்ளது. அவர் தமது இன்னிசைப் பக்திப் பாடல்களால் நமக்குள் உள்ள தெய்வீகத்தைத் தொடர்ந்து பல காலத்துக்கு வெளிப்படுத்துவார் என்றே மனப்பூர்வமாக நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப் பலரது ஆசிகளையும் பெற்றுள்ள சிவஞானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிக்கலாகுமேயன்றி, இதனால் நல்ல தீர்வைக் காண இயலாதென்பது அனுபவம் கண்ட உண்மை.

இன்றேல், மனிதரால் முடியாதது பிரார்த்தனையால் முடியுமென்ற வாக்கு பொய்யாமா?

## அவதூறு

இலங்கையிலே சட்ட விரோதக் குடியேற்றம் அதிகரித்துள்ளதாகவும் இதற்கு தமிழ் கிராம சேவகர்களே ஊக்கமளித்து உதவி வருவதாகவும் பௌத்த காங்கிரஸ் எனும் ஸ்தாபனம் அரசாங்கத்திடம் முறையிட்டு இதைத் தடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளதாக ஒரு செய்தி கொழும்புப் பத்திரிகையொன்றின் முதல்பக்கத்தில் வெளியாகியிருப்பது இந்நாட்டிலுள்ள தமிழரை அவதூறு செய்வதாகும்.

சமீபத்தில் அரசாங்கத்திலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர்கள் கலந்தாலோசித்தபோது சட்டவிரோதக் குடியேற்றம் பெரிதும் குறைந்துள்ளதாகவும் இதற்குக் கண்டிப்பான தடுப்பு நடவடிக்கைகளே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. உண்மை அப்படி இருக்க, சட்டவிரோதக் குடியேற்றம் அதிகரித்துள்ளதாக ஒரு பொறுப்புவாய்ந்த ஸ்தாபனம் என்ன ஆதாரத்தைக் கொண்டு கூறியுள்ளது? சட்டவிரோதக்குடியேற்றத்துக்கு தமிழ் கிராமசேவகர்களே பெரிதும் உதவுவதாக பௌத்த காங்கிரஸ் கூறியிருப்பதற்கு ஏதும் அத்தாட்சி உண்டா? அவர்களால் அதை நிரூபிக்க முடியுமா? இவ்வித செய்திகளால் தமிழ் அதிகாரிகள்மீது பொதுமக்களுக்கு எவ்வித தப்பான கருத்து ஏற்படுமென்பதை அந்த ஸ்தாபனமோ அச்செய்தியை முதல்பக்கத்திலே வெளியிட்ட கொழும்புப் பத்திரிகையோ சற்றுவது உணர்ந்தனவா?

நாட்டில் பல சமூகத்தவரிடையிலேயும் அபிமானமும் ஒத்துழைப்பும் நிலவ வேண்டுமென்று கவர்னர் ஜெனரலும், பிரதமமந்திரியும் பல இடங்களிலும் வற்புறுத்தி வருகையில் அதற்கு நேர்மாறாக இவ்விதமான தீர்மானங்களை நிறைவேற்றி அதைப் பத்திரிகைகளிலும் வெளியிடச் செய்வது எவ்வளவு பெரிய குற்றமாகுமென்பதை அவர்களே சற்று சிந்தித்தால் இவ்விதம் இனியும் செய்யத் துணிய மாட்டார்கள். மிகப் பொறுப்புள்ள ஒரு சமய ஸ்தாபனமே இவ்விதம் செய்யின் மற்றவர்களைப் பற்றிக் கூறவேண்டுமா? இனி இவ்விதம் தமிழர் மீது ஆதாரமற்ற வீண் அபாண்டங்களைச் சுமத்தாமலும் அவதூறுகள் செய்யாமலும் தடுக்க, புதிய அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

# புதிய 'நண்பர்'கள் பற்றி எச்சரிக்கை வேண்டும்!

## கெனமன் கூறுகிறார்

கோட்டை, ஞாயிறு

ஐக்கியமுன்னணி அரசாங்கம் தனது புதிய நண்பர்கள் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் எமக்கு விரோதிகளாகவிருந்து தீங்கிழைக்க நினைத்த இவர்கள் இன்று சோஷலிச கொள்கைகளை செயல்படுத்துவது பற்றி எங்களுக்கு ஆலோசனை கூறுகிறார்கள். லட்சக்கணக்காக எம்மை மயழிப்பதற்குச் செலவு செய்த இந்த முதலாளிகள் இப்பொழுது நாட்டைக்காக்கும் நிதிக்கு' வாரி வழங்குகிறார்கள்.

கொழும்பில் அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் உரையாற்றிய வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: நாம் முன்னர் 2படி வழங்குவோம் என வாக்குறுதியளித்தபோது ஐ. தே. கட்சியினர் இந்தவாக்குறுதியை ஒரு தேர்தல்குண்டு எனக் கூறிப் பரிகாசம் செய்தனர். இது தேர்தல் குண்டு தானா எனப் பார்ப்பதற்கு செப்டம்பர் 26-ம் திகதி உங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களைக் கொண்டு கூட்டுறவுக் கடைகளுக்கு வாருங்கள். தேர்தல்குண்டு எனக்கருதிய ஐ. தே. கட்சியினரும் பங்கீட்டரிசிப் புத்தகங்களோடு வரலாம்.

...டுப்பின்மூலம் வாக்காளரின் ஆதரவை அது பெறவேண்டும். இது கட்டாய வாக்கெடுப்பு. சமஷ்டி அரசியலில் செய்யும் திருத்தங்கள் இவ்விதம் மக்களின் அங்கீகாரம் பெறவேண்டும். பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றால் மட்டும் போதாது. பெரும்பான்மை காண்டன்களின் ஆதரவைப் பெற்றாலே அது அக்காண்டனின் ஆதரவைப் பெற்றதாகும். காண்டனைப்பற்றிய ...மல் இந்தமுறை அவர்களைக் கட்டுப்படுத்தி நிதானமாகக் காரியங்கள் செய்ய உதவுகின்றது.

### நேர்முக வாக்கெடுப்பு

ஐந்து மண்டலம் அல்லது காண்டன்களில் 'லாண்ட்ஸ் ஜிமின்டன்' என்ற நேர்முக ஜனநாயக வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

இதன்படி ஒவ்வொருவருடமும் வசந்தகாலத்தில்ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று ...னிஸ்ட்டுகள் தங்களை தொழிற்கட்சி என்று அழைத்துக் கொள்கின்றனர் இவற்றைத்தவிர வேறுசில சில்லறைக் கட்சிகளும் இயங்குகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு ...த்தின் பின்பு ஆதரவு அதிகரித்திருக்கின்றது. பலவித தொழில், பொருளாதார ஸ்தானங்களும் கட்டுப்பாடாக இருப்பதால் அரசியல் கட்சிகளுக்கு அதிகசெல்வாக்கு இல்லை. 'தனிப்பட்டவர்

...படிச் செலவும், நாளொன்றுக்கு ஒரு சிறிய சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இருசபைகளிலும் காண்டன் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள், யூனியன் காரியதரிசிகள், டாக்டர்கள் ஆசிரியர்கள். நியாய துரந்தரர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள் பத்திரிகை ஆசிரியர்கள் முதலியோர் அங்கம் வகிக்கின்றனர்.

சில சமயம் இருசபைகளும் சேர்ந்து கூடுவதுமுண்டு.

சமஷ்டி சபை, சமஷ்டி உயர் நீதிமன்றம் சமஷ்டி இன்சூரன்ஸ் நீதிமன்றம் இவற்றுக்கு பிரதிநிதிகளையும் தலைவர் உபதலைவர், இவர்களையும் இந்தக்கூட்டு சபை தெரிவுசெய்யும். பாரதூரமான அரசியற்குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கும் அதிகாரமும் இக்கூட்டுச்சபைக்கு உண்டு. சாதாரண குற்றங்களை மன்னிக்கும் அதிகாரம் காண்டன் பெரிய சபைக்கு இருக்கிறது. தேசியசபையின் தலைவரே இந்தஐக்கிய சமஷ்டி சபைக்கூட்டத்துக்கு தலைமை வகித்து நடாத்துவார்.

... ...

...ருக்கே பிடிக்காது. ஈ. வெ. ரா. ஆரம்பித்த இயக்கங்கள் எல்லாமே இதுவரை நல்ல பலன்காள அளித்துள்ளன அதுபோல் இப்போதும் தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியாவில் தெய்வ நம்பிக்கை மீண்டும் பலப்பட இது உதவியாக இருக்கக்கூடும். பெரியாருக்குள் இருந்து உந்துவதும், ஆஸ்திகரின் நம்பிக்கையின்படி ஆதே தெய்வம் தானே. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற வார்த்தை பொய்க்குமா?

0 0 0

தெய்வீகப் பேரவை சென்ற மாதம் தமிழகத்தில் கூடுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அக்கூட்டம் ஒத்திப்போடப் ...துக்கு வெளிப்படுத்துவார் என்றே மனப்பூர்வமாக நம்புகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப் பலரது ஆசிகளையும் பெற்றுள்ள சிவஞானத்தரின் எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்கப்போகின்றது என்பதில் ஐயமில்லை. அவர்களும், அவரது தெய்வீகப் பணிகளும் நீடூழி வாழ்க!

0 0 0

நனிகடம்பனைப் பெற்றவன் பங்கினன், தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான். தன்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன் பணி செய்து கிடப்பதே.

—அப்பர் அடிகள்

0 0 0

# குமாரபுர முருகன் ஆலயமும் குமாரபுர வெண்பாவும்!



குமாரபுரம் சித்திர வேலயுத சுவாமி கோவில்

தண்ணீரூற்றைச் சேர்ந்த குமாரபுரம் ஈழநாட்டின் பழமை வாய்ந்த முருகன் பழம்பதியாகும். இரண்டாயிரமாண்டு பழமையுடைய அவ்வாலயம் பரராச சேகர மன்னனால் கி. பி. 14-ம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. பறங்கிக்காரர் இலங்கை ஆட்சிக்கு வந்தகாலத்தில் அக்கோவில் இடிக்கப்பெற்று தரைமட்டமாக்கப் பெற்றது.

பின்னர் பண்டார வன்னியன் என்னும் வன்னிநாட்டு மன்னனால் சித்திரவேலைப்பாடு ஒருங்கு அமைந்த தோர் விமானம் எடுக்கப் பெற்றது. 31- ஒக் 1803ல் பண்டாரவன்னியன் கப்ரின் வொன்-டிறிபேக் தளபதியால் சிறைபிடித்துக் கொல்லப்பட்டதும் வன்னிநாடு அழிவுற்றது.

அதனால் கிலமடைந்து காடுமூடிய இவ்வாலயத்தைப் புத்தூர் நாராயணக் குருக்கள் அரசினரிடமிருந்து பெற்றுப் புனரமைப்புச் செய்தார். வவனியா முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. செ. சுந்தரலிங்கம் அதற்கு ஒரு விநாயகர் ஆலயம் கட்டுவித்தார். பிரம்மஸ்ரீ கு. பரமசாமிக் குருக்கள் முத்துக்குமார சுவாமிபிரதிட்டை செய்வித்தார். பிரம்மஸ்ரீ கு பரமசாமிக் குருக்களுடன் இப்போது அவ்வாலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய முல்லைத்தீவு முதலியார் ஆ. மு. கனகசபாபதி நொத்தாரிஸ் செ. தம்பையா, சிவஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள், திரு. க. தங்கராசா, திரு. தா. சிவசிதம்பரம், வித்துவான் இ. திருநாவுக்கரசு இன்னும் பலர் கொண்ட திருப்பணிச் சபை ஒன்று உருவாகியுள்ளது.

### குமாரபுர வெண்பா

பழம்பெருமை வாய்ந்த இவ்வாலயம் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் போன்று சிறப்புடையது அதனைப் புதுப்பிக்கவேண்டியதுதமிழ் சைவமக்களின் பெரும் பணியாகும், இத்திருப்பணிக்கு உதவுவோர் திரு. செ. தம்பையா ஜே. பி.. பிரசித்த நொத்தாரிஸ், பொருளாளர், குமாரபுரம் திருப்பணிச் சபை, முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவித்துள்ளனர்

அத்திருப்பணிக்கு உபகரிக்கு முகமாக பண்டிதர் வித்துவான் - சைவப்புலவர் இணுவையூர் இ திருநாவுக்கரசுவினால் இயற்றப்பெற்ற 'குமாரபுர வெண்பா' நூல் ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியிடப்பட்டது, வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் கௌரவிக்கப்பட்டார்,

## ஏழைகளுக்கு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்பணத்தை எப்படிப் பெறலாம்? இந்தக்கட்டத்தில்தான், வங்கிகள், இறக்குமதி ஏற்றுமதி வெளிநாட்டு கம்பனிகள் முதலியவற்றை தேசியமயமாக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தேசியப் புரட்சியில் இன்னொரு அம்சம் ஜனநாயகம் இதன்கீழ்தான் சாதிவேற்றுமைகள், நிலப்பிரபுத்துவம், சமுதாய ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பிரச்னைகளை ஆராய வேண்டும் இப்பிரச்னைகள் இருக்கும்வரைமுழுமையான ஜனநாயகம் ஏற்படமாட்டாது புரட்சிகளையும் மாற்றங்களையும். தொழிலாளர்களின் போராட்டங்களே உருவாகுகின்றன. ஆதலால் தொழிலாளர் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களுடன் நாம் கூட்டுச் சேர வேண்டும்.

இன்று தமிழரசுக் கட்சி இரட்டைநாக்குடன் பேசுகிறது. கொழும்பில் அரசாங்கத்தில் சோஷலிஸ திட்டங்களுக்கு ஆதரவு கொடுப்போம் என்று கூறும் தமிழரசார்கள், இங்கு சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டும் என்று கூறுகிறார்கள் இப்படிப்பட்ட தந்திரங்களை மக்களுக்கு நமது கட்சி உறுப்பினர்கள் விளக்கிக்கூற வேண்டும்.

திரு பொன். குமாரசுவாமி பேசும்போது கூறியதாவது: எந்தெந்தக் காரணங்களுக்காக தென்னிலங்கை மக்கள் ஓர் அரசியல் புரட்சியை ஏற்படுத்தினார்களோ அதில் எதுவும் தமிழர்களிடையே அரசியல் புரட்சியை ஏற்படுத்த தவறிவிட்டது. தமிழர்களின் ஆங்கில மோகம் தேசியப் புரட்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. டொமினிக் ஜீவா, திரு. வி. எஸ் கந்தசாமி, திரு. தவஞானம், கே. சிவானந்தன், எஸ். கந்தசாமி, வி. இராஜதுரை ஆகியோரும் இம்மகாநாட்டில் பேசினார்கள். இம்மகாநாட்டை தொடர்ந்து இம்மாதம் 15-ம் திகதி நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

# கோவா விடுதலை வீரர் பாரதம் வந்து சேர்ந்தார்

## புதுடில்லியில் வீர வரவேற்பு

புதுடில்லி, ஆகஸ்ட், 2

கோவா விடுதலை வீரர் டாக்டர் பாஸ்கரநாத்இன்று காலை பாரதம் வந்து சேர்ந்தபொழுது அவருக்கு வீர வேற்பு அளிக்கப்பட்டது

கோவாவின் விடுதலைக்காகப் போராடிய டாக்டர் மாஸ்கரநாத் பத்தாண்டு காலம் போர்த்துக்கலில் சிறையிருந்துவிட்டு தாயகம் திரும்பியுள்ளார்.

கோவா விடுதலை வீரரை ஆசியத் தலைவர்கள், ஆட்சி மன்ற உறுப்பினர்கள் உறவினர்கள் மற்றும் பிரமுகர்களும் வரவேற்றார்கள். அவரது துணைவியார் எல்சா மாஸ்கரநாத்து விமானநிலையத்தில் அவரை ஆவலோடு வரவேற்றார். அவர் வருகைக்காக திருமதி எல்சா கடந்த சில தினங்களாகவே புதுடில்லியில் தங்கியிருந்தார்.

71 வயதான டாக்டர் மாஸ்கரநாத் சிறையில் பொழுதைக் கழிப்பதற்காக சித்திரங்கள் வரைந்து வந்ததாகத் தெரிவித்தார். மீண்டும் தமது நாட்டில், தம் மக்களோடு சுதந்திரமாக இருப்பது குறித்து தாம் பெருமகிழ்ச்சி யடைவதாக அவர் தெரிவித்தார். புதுடில்லியில் தங்கியிருக்கும் போது அவர் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியையும் பிற தலைவர்களையும் சந்திப்பார் என்று தெரிகின்றது.

டாக்டர் மாஸ்கரநாத் மீண்டும் சுதந்திரபுருஷராக விருப்பது குறித்து பெரிதும் மகிழ்ச்சியளிப்பதாக விருக்கின்றது என்று இந்திய அரசாங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org